بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6
வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

இதழ் 42
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

14 ரபீவுல் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 21 இஹா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 21 அக்டோபர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنْصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

நம்பிக்கை கொண்டவர்களே! போதைப் பொருள்கள், சூதாட்டம், சிலை (வழிபாடு)கள், குறி பார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத்தக்க(தும்) ஷைத்தானின் செயலுமேயாகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து (முற்றிலும்) விலகிக் கொள்ளுங்கள். (5:91)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**சித்தீக் என்ற சொல் மிகைப்படுத்தும் இலக்கண அமைப்பில் உள்ளது. அதாவது உண்மையில் முற்றிலும் தம்மை மாய்த்துக் கொண்டவர். மேலும் உயர்தரமான நேர்மையை பின்பற்றக்கூடியவர். மேலும் உண்மையான அன்பராக இருப்பவர்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### சித்தீகிய்யத் என்ற அந்தஸ்து

சித்தீக் என்ற சொல் (அமைப்பு) மிகைப்படுத்தும் (இலக்கண) அமைப்பில் உள்ளது. அதாவது உண்மையில் முற்றிலும் தம்மை மாய்த்துக் கொண்டவர். மேலும் உயர்தரமான நேர்மையை பின்பற்றக்கூடியவர். மேலும் உண்மையான அன்பராக இருப்பவர். அந்நிலையில் அவர் சித்தீக் என்று அழைக்கப்படுவார். இது எப்படிப்பட்ட ஒரு நிலை என்றால் ஒரு நபர் அந்த அந்தஸ்தை அடையும்போது அவர் எல்லா வகையான உண்மைத்துவங்களையும், நேர்மைகளின் உருவமாகவும், அதனை ஈர்க்கக் கூடியவராகவும் ஆகி விடுகின்றார். அதாவது ஒரு கண்ணாடி சூரிய ஒளிக்கதிர்களை தன்னிடம் ஒன்றுகூட்டி விடுவதைப் போன்று சித்தீக் என்பவர் உயர்தரமான உண்மைத்துவத்தை ஈர்க்கக் கூடியவராக இருக்கின்றார்.

### உயர்தரமான உண்மைத்துவத்தை பெறுவதற்கான தத்துவம்

சித்தீக்கின் சிறப்புகளை பெறுவதற்குரிய தத்துவம் என்னவென்றால் அவர் தமது பலவீனங்கள் மற்றும் இயலாமையைக் கண்டு தனது ஆற்றல் மற்றும் அந்தஸ்திற்கேற்ப إِيَّاكَ نَعْبُدُ (நாங்கள் உன்னையே வணங்குகின்றோம்) என்று கூறுகின்றார். மேலும் உண்மையை மேற்கொள்கின்றார். பொய்யை கைவிட்டு விடுகின்றார். எல்லா வகையான அசுத்தங்களையும் அதாவது பொய்யுடன் தொடர்புடைய அனைத்து அசுத்தங்களையும் விட்டு அவர் ஓடுகின்றார். மேலும் நான் ஒருபோதும் பொய் பேச மாட்டேன். பொய் சாட்சியம் வழங்க மாட்டேன். மேலும் மன இச்சைகளின் வடிவில் எந்த பொய்யான பேச்சையும் பேச மாட்டேன் என்று உடன்படிக்கை எடுக்கின்றார். வீணாகவும், நன்மையைப் பெறுவதற்காகவும், தீமையை அகற்றுவதற்காகவும் ஒருபோதும் எந்த நிலைமிலும், எந்த வடிவிலும் பொய்யை மேற்கொள்ள மாட்டேன் என்று அவர் உடன்படிக்கை செய்கின்றார். இந்த அளவிற்கு அவர் வாக்குறுதி வழங்கும்போது إِيَّاكَ نَعْبُدُ (நாங்கள் உன்னையே வணங்குகின்றோம்) என்பதன் மீது அமல் செய்யப்படுகின்றது. மேலும் அந்த அமல் என்பது உயர்தரமான இறைவணக்கமாகும். إِيَّاكَ نَعْبُدُ என்பதிலிருந்து முன்னேறி إِيَّاكَ نَسْتَعِينُ என்ற இடத்தை அடைவதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 331 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**யாசிக்காமலும், பேராசையின்றியும் இறைவன் (பிறர் மூலம்) தந்தால்?**

1473: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அன்பளிப்புச் செய்யும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். நான் இதை என்னை விட அதிக தேவையுடையவருக்கு வழங்குங்கள் என்பேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நீர் ஆசை கொள்ளாமலும், யாசிக்காமலும் இருக்கும்போது இவ்வாறு வரும் செல்வங்களை பெற்றுக் கொள்ளும். ஏதும் கிடைக்கவில்லை என்றாலும் அப்பொருட்களுக்குப் பின்னால் உம்முடைய மனதைத் தொடரச் செய்யாதீர் (அது கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கொள்ள வேண்டாம்) என்று கூறினார்கள்.

**யாசிப்பதற்கு கண்டனமும், அதற்குரிய தண்டனையும்**

1474: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மனிதன் எப்போதும் மக்களிடம் யாசித்துக் கொண்டே இருக்கின்றான். எந்த அளவுக்கென்றால் அத்தகைய மனிதன் தன் முகத்தில் சிறிதளவு கூடச் சதை இல்லாதவனாக மறுமை நாளில் வருவான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஹஷர் என்பதன் பொருள் ஒன்றுகூட்டுவதாகும். மரணத்திற்குப் பிறகு நிகழும் உலகத்திற்காக இந்த சொல் பயன்படுத்தப்படுகின்றது. அந்த நாளில் முன், பின் அனைத்து மனிதர்களும் ஒன்று கூட்டப்படுவார்கள். அந்த நாளில் நிகழும் கூட்டத்திற்கும் ஹஷர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது**

وَإِنَّ رَبَّكَ هُوَ يَحْشُرُهُمْ ۚ إِنَّهُ حَكِيمٌ عَلِيمٌ

பொருள்: நிச்சயமாக உமது இறைவனே அவர்களை ஒன்றுகூட்டுவான். அவன் நிச்சயமாக நுட்பமான ஞானமிக்கவனும், எல்லாவற்றையும் அறியக் கூடியவனும் ஆவான். (15:26)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஷர் என்பதன் பொருள் ஒன்றுகூட்டுதலாகும். மரணத்திற்குப் பிறகு நிகழும் உலகத்திற்காக இந்த சொல் பயன்படுத்தப்படுகின்றது. அந்த நாளில் முன், பின் அனைத்து மனிதர்களும் ஒன்று கூட்டப்படுவார்கள். அந்த நாள் நிகழும் கூட்டத்திற்காகவும் ஹஷர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நபிமார்கள் மூலமாக இவ்வுலகில் நடைபெறும் கூட்டத்திற்கும் ஹஷர் என்ற சொல் கூறப்படுகின்றது. அதாவது முழு சமுதாயமும் கருத்து வேறுபாடுகள் மற்றும் சண்டைகளிலிருந்து வெளியேறி ஒற்றுமையின் கயிற்றில் அவர்கள் பிணைக்கப்படுகின்றார்கள். அவ்வாறு ஒரு நபியின் மூலம் ஹஷர் நடைபெறாத எந்த நபியும் உலகில் வரவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தைப் பாருங்கள். எவ்வாறு ஹஷர் நடைபெற்றது? பல்வேறு சிந்தனை கொண்ட மக்கள் ஒரு கலிமாவில் ஒன்று கூட்டப்பட்டார்கள். பின்னர் முழு உலகிலும் அது பரப்பப்பட்டது. இந்த வசனத்தில் இரண்டு ஹஷர் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உலக ஹஷரின் பக்கம் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்று உமது சமுதாயம் உமக்கு எதிராக உள்ளது. ஆனால் ஒரு நாள் அனைவரும் உனது கரத்தின் கீழ் ஒன்றுகூட்டப்பட்டு விடுவார்கள். ஹகீம் மற்றும் அலீம் என்ற பண்புகளிலிருந்து இது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உடனடியாக ஏன் ஒன்றுகூட்டப்படவில்லையென்றால் அது நுட்பமான ஞானத்திற்கு எதிரானதாகும். உடனடியாக மக்கள் இவ்வாறு ஒன்றுகூடியிருக்க முடியும். அதாவது அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் ஆதிக்கம் செலுத்தி அவர்களை பலவந்தமாக முஸ்லிமாக்கியிருக்க முடியும். ஆனால் அதனால் என்ன பயன் இருந்திருக்கும்? (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 50 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 10 செப்டம்பர் 2021 (முழுவதுமாக)*

*குத்பா பேருரை 17 செப்டம்பர் 2021 (முழுவதுமாக)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 செப்டம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. அந்தக் காலத்தில் நடைபெற்ற போர்களின் குறிப்பு இடம் பெற்றிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் டமாஸ்கஸ் பல மாதங்கள் வரை முற்றுகையிடப்பட்டிருந்தது என்றும் அன்னாரின் மரணத்திற்கு சில காலத்திற்குப் பிறகு அந்தப் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது என்றும் வரலாற்று நூல்களைப் படிப்பதால் தெரிய வருகின்றது. எவ்வாறிருப்பினும் இது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்து சம்பவமாகும். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெறும்போது இந்தப் போரைக் குறித்த விவரங்கள் அங்கு எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ். டமாஸ்கஸ் வெற்றிக்குப் பிறகு நிகழ்ந்த சம்பவங்களை நான் எடுத்துரைக்கின்றேன்.

டமாஸ்கஸ் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை பிகாஹ் என்ற திட்டத்திற்காக அனுப்பி வைத்தார்கள். பிகாஹ்: டமாஸ்கஸ், பஹ்லமக் மற்றும் ஹிம்ஸ் ஆகிய நகரங்களுக்கு மத்தியில் ஒரு பரந்துபட்ட பகுதி ஆகும். அதில் ஏராளமான ஊர்கள் உள்ளன. அவர்கள் அதனை வெற்றி கொண்டனர். மேலும் ஒரு படை அடுத்த நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மைஸ்நூன் பெயர் கொண்ட நீரூற்றில் ரோமானியர்கள் மற்றும் (முஸ்லிம்) படையினருக்கு மத்தியில் சண்டை மூண்டது. பின்னர் இருவரும் போரிட்டனர். தற்செயலாக ரோமானியர்களை சார்ந்த சினான் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் பேரூத்தின் பின்புற பகுதியிலிருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதில் வெற்றி கண்டான். முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கையை ஷஹீதாக்கி விட்டான். பேரூத் என்பது சிரியா நாட்டின் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு பிரபலமான நகரமாகும். எனவே அந்த ஷஹீதுகளை சுட்டிக் காட்டும் விதமாக இந்த நீரூற்றிற்கு அன்னுஷ் ஷுஹதா என்ற பெயர் வந்தது. அபூஉபைதா அவர்கள் டமாஸ்கஸில் யஸீத் பின் அபூசுஃப்யானை தமது பிரதிநிதியாக நியமனம் செய்தார்கள். யஸீத் திஹ்யா பின் கலீஃபாவை ஒரு போரில் தர்மர் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வெற்றிக்குரிய பாதையை சரி செய்ய வேண்டும் என்பதற்காக அவரை அனுப்பி வைத்தார்கள். தர்மர் என்பது சிரியாவின் பகுதிகளிலுள்ள ஒரு பிரபல்யமான நகரமாகும். அது ஹலப் என்ற இடத்திலிருந்து ஐந்து நாள் தொலைவில் உள்ளது. தற்போது எடுத்துரைக்கப்படுகின்ற யஸீத் ஹஸ்ரத் அபூசுஃப்யான் அவர்களின் மகன் ஆவார்.

அதேபோன்று அபூஸஹ்ரா குஷைரி அவர்களை சயிபா மற்றும் ஹவ்ரான் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் அங்குள்ள மக்கள் சமாதானம் செய்து கொண்டனர். பஸனிய்யா டமாஸ்கஸிற்கு அருகிலுள்ள ஒரு ஊரின் பெயராகும். ஹவ்ரான் டமாஸ்கஸின் ஒரு பரந்துபட்ட பகுதியாகும். அதில் ஏராளமான ஊர்களும், விவசாயத்திற்குரிய நிலங்களும் இருந்தன. ஷுர்ஹபீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள் உர்தன் ஆளுமையில் இருந்த தபரிய்யாவை விட்டு விட்டு மீதமிருந்த அனைத்து நாடுகளும் போரின் மூலமாக அதாவது போர் திணிக்கப்பட்டபோது கைப்பற்றப்பட்டது. இந்த தபரிய்யாவாசிகள் சமாதானம் செய்து கொண்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பகாஹ்வின் பகுதிகளிலிருந்து வெற்றி பெற்று திரும்பினார்கள். பஹ்லபகூ வாசிகள் அன்னாரிடம் சமாதானம் செய்து கொண்டார்கள். அன்னார் அவர்களுடனும் எழுத்துப்பூர்வமாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் வரலாறு மற்றும் சாதனைகள் என்ற நூல் பக்கம் 730 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 402, 557, 623 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 20, 364)

பக்லபக் என்பதும் டமாஸ்கஸிலிருந்து மூன்று நாள் (பயண) தொலைவில் அமைந்துள்ள ஒரு பழைய நகரமாகும். (இது வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது).

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 537, 538)

இங்கு நாட்களின் தொலைவு என்பதன் பொருள் என்னவென்றால், அந்தக் காலத்தில் பயணம் ஒட்டகங்கள் அல்லது குதிரைகள் மூலமாக இருந்தது. பயணத்திற்கான வழிமுறையாக இருந்ததன் மூலமாக தொலைவு கணக்கிடப்பட்டது.

பஹில் ஓர் இடம் ஆகும். (அதன்) வெற்றி ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஹர்குல் ஹிம்ஸில் தங்கி இருப்பதாகவும், அங்கிருந்து டமாஸ்கஸிற்கு படைகளை அனுப்புகின்றான் என்று எனக்கு தெரிய வந்துள்ளது. எனவே முதலில் டமாஸ்கஸின் மீது தாக்குதல் தொடுக்கவா? அல்லது பஹல் மீதா? என்று முடிவெடுக்க எனக்கு கடினமாக உள்ளது என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். பஹல் என்பதும் சிரியா நாட்டிலுள்ள ஒரு நகரத்தின் பெயராகும். அதற்கு பதிலளிக்கும் விதமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதினார்கள். முதலில் டமாஸ்கஸின் மீது தாக்குதல் நடத்தி அதனை வெற்றி கொள்ளுங்கள். அது சிரியாவின் கோட்டையாகும். அது தலைமைத்துவம் வாய்ந்த அந்தஸ்தில் உள்ளது. அத்துடன் பஹல் நகரத்திலும் படைகளை அனுப்புங்கள். அவர்களை உங்கள் பக்கம் முன்னேற விடாதீர்கள். டமாஸ்கஸிற்கு முன்பாக பஹல் வெற்றி கொள்ளப்பட்டு விட்டால் நல்லது. இல்லையென்றால் டமாஸ்கஸ் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு சிறிதளவு படையை அங்கு விட்டு விட்டுச் செல்லவும். அனைத்து தலைவர்களையும் தம்முடன் அழைத்துக் கொண்டு பஹலிற்கு புறப்படுங்கள். மேலும் அல்லாஹ் உங்களது கரங்களில் பஹலை வெற்றி கொள்ளச் செய்து விட்டால் மேலும் நீங்கள் ஹிம்ஸ் சென்று விட்டால் அந்நிலையில் ஷர்ஹபீல் மற்றும் அம்ர் அவர்களை உர்தன் மற்றும் பாலத்தீனம் அனுப்பி வையுங்கள்.

இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதமாக இருந்தது. இது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு கிடைத்ததும் அன்னார் படையின் பத்து அதிகாரிகளை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்களில் மிகவும் சிறந்தவரான அபூஅல்அவூர் சுல்மி அவர்களை பஹலிற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை டமாஸ்கஸிற்கு அனுப்பி வைத்தார்கள். ரோமானிய படை முஸ்லிம்களை நோக்கி வருவதை கண்டபோது தம்மைச் சுற்றியிருந்த நிலங்களில் திபெரியாஸ் கடல் நீரையும், உர்தன் நதியையும் விட்டு விட்டார்கள். அதன் மூலம் முழு நிலமும் சதுப்பு நிலமாக மாறிவிட்டது. அதனை கடப்பது கடினமாகி விட்டது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் மொழிபெயர்ப்பு செய்த ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 194, 195 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 114 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 268)

எவ்வாறிருப்பினும் ஹர்குல் டமாஸ்கஸின் உதவிக்காக படைகளை அனுப்பி இருந்தான். அவனால் டமாஸ்கஸ் வரை வந்து சேர முடியவில்லை. தண்ணீர் திறந்ததன் காரணமாக அனைத்து வழிப்பாதைகளும் அடைபட்டு விட்டன. ஆனால் முஸ்லிம்கள் உறுதிப்பாட்டுடன் இருந்தனர். முஸ்லிம்களின் உறுதிப்பாட்டைக் கண்டு கிறிஸ்துவர்கள் சமாதானத்திற்கு இறங்கி வந்தார்கள். தூதுவர் ஒருவரை அனுப்பி வைக்குமாறு அபூஉபைதா அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை தூதரக பேச்சு வார்த்தைக்காக அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள், அவர்களுக்கு முன்னால் இஸ்லாமிய போதனைகளை எடுத்து வைத்தார்கள்.

ஆனால் அவர்கள் (அதாவது எதிரிகள்) அதனை ஒப்புக் கொள்ளவில்லை. ஏனைய விஷயங்களை தவிர்த்து ரோமானியர்கள் ஹஸ்ரத் மஆஸ் (ரலி) அவர்களிடம் இந்த திட்டத்தை முன் வைத்தார்கள். அதாவது நாங்கள் உங்களுக்கு உர்தனில் இணைந்துள்ள புல்கா மாவட்டத்தின் பகுதியை தருகிறோம். நீங்கள் இந்த நாட்டை விட்டு விட்டு பாரசீகத்திற்கு சென்று விடுங்கள்.

முன்னர் படையை சுயமே ஒன்றுகூட்டிக் கொண்டிருந்தனர். தோற்கும் நேரம் வந்து விட்டது என்பதை கண்டபோது சமாதானத் திட்டங்களை முன் வைத்தனர். ஹஸ்ரத் மஆஸ் (ரலி) அவர்கள் நிராகரித்து விட்டார்கள். இல்லை என்று கூறி அன்னார் தமது இடத்திற்கு எழுந்து வந்து விட்டார்கள். ரோமானியர்கள் நேரடியாக அபூஉபைதாவுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்பினார்கள். எனவே இந்த நோக்கத்திற்காக ஒரு சிறப்புத் தூதுவரை அனுப்பினார்கள்.

தூதுவர், முஸ்லிம்கள் கூடாரத்திற்கு வந்தடைந்த நேரத்தில் அங்கு அபூஉபைதா அவர்கள் நிலத்தில் அமர்ந்திருந்தார்கள். கைகளில் அம்புகள் இருந்தன. தளபதி என்பவர் மாபெரும் ஆடம்பர தோற்றத்தை பெற்றிருப்பவர். அதுவே அவரை அடையாளம் காண்பதற்கான வழிமுறையாகும் என்று தூதுவர் எண்ணினார். அவர் எந்த பக்கம் பார்த்தாலும் அனைத்திலும் ஒரே வடிவமான நிறம் மறைந்திருந்தது. இறுதியில் பரிதவித்து உங்களது தலைவர் யார்? என்று கேட்டார். அப்போது மக்கள் அபூஉபைதா அவர்களை சைகை செய்து காட்டினர். அவர் ஆச்சரியம் அடைந்தார். ஆச்சரியத்துடன் அவர்களின் பக்கம் பார்த்தவாறு இவ்வாறு கூறினார்: உண்மையில் நீங்கள் தான் தலைவரா? ஆம் என்று ஹஸ்ரத் உபூஉபைதா அவர்கள் கூறினார்கள். தூதுவர் கூறினார்: நாங்கள் உங்களது படையின் ஒவ்வொரு தலைவருக்கும் இரண்டு அஷ்ரா ஃபிகளை வழங்குகின்றோம். நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் நிராகரித்து விட்டார்கள். அதனால் தூதுவர் மிகவும் அதிருப்தி அடைந்தார். மேலும் எழுந்து சென்று விட்டார். அபூஉபைதா அவர்கள் அன்றைய தினமே அறையை பூட்டுவதற்கு கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால் ரோமானியர்கள் போருக்கு வரவில்லை. மேலும் அடுத்த நாள் காலை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மட்டும் சவாரிகளுடன் மைதானத்திற்கு சென்று விட்டார்கள். ரோமானிய படையும் தயாராக இருந்தது. இருவருக்கிடையிலும் போர் நடைபெற்றது. முஸ்லிம்களின் உறுதிப்பாட்டைப் பார்த்து ரோமானிய படை வீரர்கள் நீண்ட நேரம் போரிடுவதை வீணானதாக கருதினார்கள். மேலும் திரும்பிச் செல்ல விரும்பினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்களை அழைத்தார்கள். ரோமானியர்கள் தமது முழு பலத்தையும் செலவிட்டார்கள். இப்போது நமது முறையாகும் என்று கூறினார்கள். அத்துடன் முஸ்லிம்கள் திடீரென தாக்குதல் தொடுத்தார்கள். மேலும் ரோமானியர்களை பின்வாங்க செய்தார்கள். கிறிஸ்துவர்கள் உதவிக்கான எதிர்பார்ப்புடன் போரை தவிர்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களின் திட்டத்தை புரிந்து கொண்டார்கள்.

எனவே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ரோமானியர்கள் நமது தாக்கத்திற்குள்ளாகி விட்டனர். தாக்குதலுக்குரிய நேரம் இதுவே ஆகும். எனவே அடுத்த நாள் தாக்குதல் நடைபெறும். படை அப்போதே தயாராகி விட வேண்டும் என்று அறிவித்தார்கள். இரவின் பிந்தைய பகுதியில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் படையை ஒழுங்குபடுத்தினார்கள். ரோமானிய படையின் எண்ணிக்கை சுமார் 50,000 ஆக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடிய இரண்டு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களான ஹேகல் மற்றும் ஸலாபி ஆகியோர் இந்த எண்ணிக்கை 80,000 லிருந்து ஒரு லட்சம் வரை என்று கூறியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் ஒரு மணி நேரம் கடுமையான போர் நடந்தது. அதன் பிறகு ரோமானிய படைகளின் பாதங்கள் தடுமாறி விட்டன. மேலும் மிகவும் தன்னிலை மறந்து ஓடி விட்டனர். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முழு நிலத்தையும் அந்த நிலங்களின் உரிமையாளர்களிடமே நீங்கள் ஒப்படைத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். எந்த நிலமும் எவரிடமிருந்தும் பெறப்படாது. மக்களின் உயிர்களும், செல்வங்களும், நிலங்களும், வீடுகளும், வணக்கஸ்தலங்களும் அனைத்தும் பாதுகாப்பாக இருக்கும். பள்ளிவாசல்களுக்காக மட்டும் இடம் பெறப்படும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 730 & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 114 – 118 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 213 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

நிலம் பெறவேண்டுமென்றாலும் கூட பள்ளிவாசல்களுக்காக மட்டும் பெற வேண்டும். எஞ்சிய இடங்கள் அவர்களின் எஜமானர்களிடமே இருக்கும்.

அடுத்து பைஸ்தான் வெற்றி தொடர்பான குறிப்புகள் உள்ளன. ஷுரஹ்பீல் ஃபஹல் போரிலிருந்து வெளியேறியவுடன் தமது படையை அழைத்துக் கொண்டு பைஸ்தான்வாசிகளை நோக்கி முன்னேறினார்கள். மேலும் அவர்களை முற்றுகையிட்டார்கள். அந்த நேரத்தில் அபுல்அஃவர் மற்றும் அவர்களுடன் வேறு சில தலைவர்கள் தபரிய்யா என்ற இடத்தை முற்றுகையிட்டிருந்தார்கள். பைஸ்தான் தபரிய்யாவின் தெற்கில் 18 மைல் தொலைவில் அமைந்துள்ள இடமாகும். உர்தன் பகுதிகளில் டமாஸ்கஸ் மற்றும் அதன் பிறகு வேறு சில திட்டங்களில் ரோமானியர்களின் தோல்வி குறித்த செய்தி திரைமறைவாக பரவியிருந்தது. ஷுரஹ்பீல் தம்முடன் அம்ர் பின் அல் ஆஸ் மற்றும் ஹாரிஸ் பின் ஹஷ்ஷாம் மற்றும் சுஹைல் பின் அம்ர் ஆகியோரை தமது படையில் அழைத்துக் கொண்டு பைஸ்தானை நோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவல் மக்களுக்கு தெரிய வந்தது. எனவே எல்லா இடத்திலும் மக்கள் கோட்டையில் ஒன்றுகூடி இருந்தனர். ஷுரஹ்பீல் பைஸ்தானை சென்றடைந்து அதனை முற்றுகையிட்டு விட்டார். அது சில நாட்கள் வரை நீண்டு கொண்டிருந்தது. ஆனால் பிறகு அங்குள்ள சில மக்கள் போருக்காக வெளியேறினர். முஸ்லிம்கள் அவர்களுடன் சண்டையிட்டனர். மேலும் அவர்களை அழித்து விட்டனர். ஏனைய மக்கள் சமாதானம் செய்து கொண்டனர். சமாதானத்திற்கான விண்ணப்பத்தையும் முன் வைத்தனர். அதனை முஸ்லிம்கள் டமாஸ்கஸ் நிபந்தனைகளின் கீழ் ஒப்புக் கொண்டு விட்டனர். அதாவது டமாஸ்கஸ் வெற்றியின்போது செய்யப்பட்டிருந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விஷயமும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 216 – கராச்சியிலுள்ள நஃபீஸ் அகாடமியில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 114 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

தபரிய்யா வெற்றி உள்ளது. தபரிய்யா வாசிகளுக்கு பைஸான் வெற்றி மற்றும் அதன் உடன்படிக்கையின் தகவல் கிடைத்தது. அப்போது அவர்கள் அபுல்அஃவர் வாசிகளுடன் இந்த நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்து கொண்டனர். அதாவது அவர்களை ஷுரஹ்பீலிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அபுல்அஃவர் அவர்களின் விண்ணப்பத்தை ஒப்புக் கொண்டு விட்டார். எனவே தபரிய்யா வாசிகள் மற்றும் பைஸான் வாசிகளுடன் டமாஸ்கஸ் நிபந்தனைகளின் கீழ் சமாதானம் ஏற்பட்டு விட்டது. நகரங்கள் மற்றும் அதற்கு அருகிலுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் அனைவரின் வீடுகளிலும் பாதி வீடுகள் முஸ்லிம்களுக்காக காலி செய்யப்பட்டன. எஞ்சிய பாதியில் ரோமானியர்கள் வசிக்க வேண்டும். மேலும் ஆண்டில் ஒரு முறை ஒரு தினார் மற்றும் நிலத்தின் விளைச்சல்களில் குறிப்பிட்ட பகுதியை செலுத்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இதன் பிறகு முஸ்லிம் தலைவர்களும் அவர்களின் படைகளும் ஊரில் தங்கி விட்டனர். உர்தனின் சமாதான உடன்படிக்கை முழுமையடைந்தது. அனைத்து உதவிப்படைகளும் உர்தன் பகுதிகளில் பல்வேறு இடங்களில் தங்கி விட்டன. வெற்றியின் நற்செய்தி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 216, 217 – கராச்சியிலுள்ள நஃபீஸ் அகாடமியில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹிம்ஸ் வெற்றி. இது 14 ஆவது நூற்றாண்டில் நடந்தது. அதன் பிறகு ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹிம்ஸை நோக்கி முன்னேறினார்கள். ஹிம்ஸ் என்பது சிரியாவின் ஒரு பிரபலமான நகரமாக இருந்தது. மேலும் போர் மற்றும் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஹிம்ஸ் டமாஸ்கஸ் மற்றும் ஹலப் என்ற நகரங்களுக்கு மத்தியில் சிரியாவில் அமைந்துள்ளது. ஹிம்ஸில் ஒரு மாபெரும் ஆலயம் இருந்தது. அதன் யாத்திரைக்காக தொலை தூரத்திலிருந்து மக்கள் வந்தனர். மேலும் அதன் பக்தர்கள் ஆகுவதில் அவர்கள் பெருமிதம் கொண்டனர். எவ்வாறிருப்பினும் ஹிம்ஸிற்கு அருகில் ரோமானியர்கள் சுயமே முன்னேறிச் சென்று போரிட விரும்பினர். மேலும் போரிட்டனர். எனவே ஒரு படை ஹிம்ஸ் நகரத்திலிருந்து வெறியேறி முஸ்லிம்களுக்கெதிராக போரிட்டது. ஆனால் அவர்கள் தோற்று விட்டனர்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) மற்றும் ஹஸ்ரத்

காலித் பின் வலீத் (ரலி) ஹிம்ஸை அடைந்து நகரத்தை முற்றுகையிட்டுக் கொண்டனர். கடுமையான குளிர் காலமாக இருந்தது. முஸ்லிம்கள் திறந்த வெளி மைதானத்தில் நீண்ட நேரம் வரை சண்டையிட முடியாது என்று ரோமானியர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அத்துடன் ஹர்குலமிடமிருந்து உதவிக்கான நம்பிக்கையும் இருந்தது. அந்த வகையில் அவன் தீவுகளிலிருந்து ஒரு படையையும் அனுப்பி வைத்தான். ஆனால் ஈராக்கின் திட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் சிறிது படையை அவர்களை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்தப் படையானது அவர்களை அங்கேயே தடுத்தி நிறுத்தி விட்டது.

அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 118, 119 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 347)

வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு எழுதியுள்ளனர். ரோமானியர்களின் கால்களில் தோலினால் ஆன காலுறைகள் இருந்தன. அவ்வாறிருந்தபோதிலும் அவர்களின் பாதங்கள் புண்பட்டிருந்தன. ஆனால் சஹாபிகளின் கால்கள் அல்லது முஸ்லிம் படையினரின் கால்களில் காலணிகளைத் தவிர வேறு எதுவும் இருந்திருக்கவில்லை.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 734 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹர்குல், ஹிம்ஸ் வாசிகளுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளித்து அவர்களுக்கு தைரியமூட்டி சுயமே ருஹா என்ற இடத்திற்கு சென்று விட்டான். வாக்குறுதி செய்தான். ஆனால் சுயமே அங்கிருந்து விலகி விட்டான். ஹிம்ஸ் வாசிகள் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே அமர்ந்து கொண்டனர். அவர்கள் கடுமையான குளிர் இருக்கும்போது மட்டுமே முஸ்லிம்களுடன் போரிடுவதற்காக வெளியேறினர். ஹர்குல் பேரரசனின் உதவிக்காக ரோமானியர்கள் காத்திருந்தனர். முஸ்லிம்கள் குளிருக்கு பயந்து ஓடி விடுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் முஸ்லிம்கள் உறுதிப்பாட்டை காட்டினர். மேலும் ஹர்குலின் உதவியும் அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. அதாவது அந்த நகர மக்களுக்கு குளிரின் காலங்கள் கழிந்திருந்தன. இனி இந்த மக்களால் போரிட முடியாது என்று ஹிமஸ்வாசிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. எனவே அவர்கள் சமாதானத்திற்காக விண்ணப்பித்தனர். முஸ்லிம்கள் அதனை ஒப்புக் கொண்டு விட்டனர். நகரத்தின் அனைத்து வீடுகளும் நகர வாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. டமாஸ்கஸைப் போன்று கராஜ் மற்றும் ஜிஸ்யா வரியின் கீழ் சமாதானம் செய்து கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனைத்து சம்பவங்களையும் தெரியப்படுத்தினார்கள். நீங்கள் தற்போது அங்கேயே தங்கி இருங்கள். மேலும் சிரியாவின் வலிமை வாய்ந்த அரபு கோத்திரங்களை உங்களது கொடியின் கீழ் ஒன்று கூட்டுங்கள். நானும் அவ்வப்போது துணைப் படையை அனுப்பி வைப்பேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கினார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 331, 332 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து மர்ஜுர் ரூமா ஓர் இடமாகும். அதே ஆண்டு மர்ஜுர் ரூமா சம்பவம் நடைபெற்றது. மர்ஜூர் ரோம் என்பது டமாஸ்கஸிற்கு அருகில் அமைந்துள்ள ஓர் இடமாகும். சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஃபஹல் என்ற இடத்திலிருந்து ஹிம்ஸ் என்ற இடத்திற்கு செல்வதற்காக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அனைவரும் ஸூல்கலா என்ற இடத்தில் முகாமிட்டார்கள். அவர்களின் நடமாட்டம் குறித்து ஹர்குல் அரசனுக்கு தகவல் கிடைத்தது. எனவே அவன் தூஸரா என்ற இடத்திற்கு படையை அனுப்பினான். மர்ஜே திமஷ்க் மற்றும் அதன் கிழக்கு பக்கத்தில் அவன் தங்கினான். அபூஉபைதா அவர்கள் மர்ஜுர்ரோம் மற்றும் அதன் படையிலிருந்து ஆரம்பித்தார்கள். அப்போது அவர்களின் நிலை அதாவது முஸ்லிம்களின் நிலை இவ்வாறு இருந்தது. கோடை காலம் வந்திருந்தது. குளிர்காலம் மிக அதிகமாக இருந்தது. அவர்களின் உடல் காயங்களால் நிறைந்திருந்தன. இந்த மக்கள் மர்ஜுர் ரோம் என்ற இடத்தை அடைந்தபோது ஷனன்ஸர் ரோமி என்பவனும் அங்கு வந்து விட்டான். மேலும் தூஸரா என்ற இடத்திற்கு அருகிலேயே அரசப் படைகளுடன் அவன் முகாமிட்டுக் கொண்டான். இந்த ஷனஸ்தர் என்பது உண்மையில் தூஸராவின் உதவி மற்றும் ஹிம்ஸ் வாசிகளை காப்பாற்றுவதற்காக வந்திருந்தான். அவன் ஒரு ஓரமாக தமது படைகளுடன் தனித்து தங்கி இருந்தான். இரவு வந்ததும் அவர்களில் இரண்டாவது படை வீரர்கள் தூஸராவிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்றதன் காரணமாக இடம் காலியாகி விட்டது. தூஸராவிற்கு எதிரில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் நின்றிருந்தார்கள். ஷனஸிற்கு எதிரில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

தூஸரா இங்கிருந்து டமாஸ்கஸிற்கு புறப்பட்டு விட்டான் என்ற செய்தி ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு கிடைத்தவுடன் ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உபூஉபைதா (ரலி) அவர்கள் ஏக மனதுடன் இந்த விஷயத்தில் முடிவெடுத்தார்கள். அதாவது தூஸராவை பிடிப்பதற்காக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் புறப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. எனவே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் குதிரை சவாரிகளில் ஒரு படைப் பிரிவை அழைத்துக் கொண்டு அதே இரவன்று அவனை பின்தொடர்ந்து சென்று விட்டார்கள். இங்கு யஸீத் பின் அபுசுஃப்யான் அவர்களுக்கு தூஸராவின் இந்த செயலைக் குறித்து செய்தி கிடைத்திருந்தது. எனவே அவர்கள் தூஸராவை எதிர்கொள்வதற்கு வந்து விட்டார்கள். இரண்டு படைகளுக்கு மத்தியிலும் போர் மூண்டது. இன்னும் இரு பிரிவுகளுக்கு மத்தியிலும் போர் நடந்து கொண்டிருந்தது. பின்னாலிருந்து ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தனது படையுடன் அந்த இடத்தை அடைந்து விட்டார்கள். அவர்கள் தூஸராவிற்கு பின் புறத்திலிருந்து தாக்குதல் தொடுத்தார்கள். எனவே எதிரி முன்னாலும் இருந்து கொண்டு இரு புறங்களிலிருந்தும் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டான்.

முஸ்லிம்கள் அவர்களை மரண குழியில் இறக்கினர். அவர்களில் தப்பி ஓடியவர்கள் மட்டுமே உயிர் பிழைத்தார்கள். முஸ்லிம்ளுக்கு இந்தப் போரில் கிடைத்த செல்வங்களை அதாவது எதிரிகளின் சவாரி செய்வதற்கான விலங்குகளையும், ஆயுதங்களையும், உடைமைகளையும் ஹஸ்ரத் யஸீத் பின் அபூசுஃப்யான் அவர்கள் தமது படைகளுக்கு மத்தியிலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் போர் வீரர்களுக்கு மத்தியிலும் பங்கிட்டு விட்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்கள் டமாஸ்கஸை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். மேலும் காலித் பின் வலீத், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை நோக்கி திரும்பி வந்து விட்டார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் அவப்பெயர் பெற்ற யஸீத் என்பவன் முஆவிய்யாவின் மகனாக இருந்தான். இந்த யஸீத் அபூசுஃப்யான் அவர்களின் மகனான யஸீத் ஆவார். தூஸரா ரோமானியர்களின் தலைவனாக இருந்தான். அவனை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கொலை செய்திருந்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் தூஸராவை பிரிப்பதற்காக புறப்பட்டபோது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஸனஸை எதிர்கொண்டார்கள். இரண்டு படைகளிலும் மர்ஜுர் ரோம் என்ற இடத்தில் போர் மூண்டிருந்தது. இஸ்லாமிய படை ஏராளமான மக்களை கொன்று விட்டது. மேலும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஸனஸ் என்பவனை தீர்த்துக் கட்டினார்கள். மர்ஜுர் ரோம் எதிரியின் பிணங்களால் நிறைந்திருந்தது. இந்த பிணங்களின் காரணமாக அந்த இடம் துர்நாற்றம் கொண்டதாக ஆனது. தப்பித்து ஓடிய ரோமானியர்கள் உயிர்பிழைத்து விட்டனர். எஞ்சியவர்களில் எவரும் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முடியவில்லை. தப்பி ஓடியவர்களை பிடிப்பதற்காக முஸ்லிம்கள் ஹிமஸ் வரை பின்தொடர்ந்தனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 359, 360 – கராச்சியிலுள்ள நஃபீஸ் அகாடமியில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 321 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் படையை அழைத்துக் கொண்டு ஹமாத்தை நோக்கி புறப்பட்டார்கள். ஹமாத்தும் சிரியாவின் ஒரு பழமையான நகரமாகும். தற்போது அது டமாஸ்கஸிலிருந்து ஐந்து நாள் பயணத் தொலைவில் அமைந்துள்ளது. ஹமாத் வாசிகள் அவர்களுக்கு முன்னால் முற்றிலும் சிரம்பணிந்து விட்டனர். மேலும் தோல்வியை ஒப்புக் கொண்டனர். ஷைஸார் வாசிகளுக்கு இது தெரிய வந்தபோது அவர்களும் ஹமாத் வாசிகளைப் போன்று சமாதானம் செய்து கொண்டனர். ஷைஸர் ஹமாத்திலிருந்து பாதி நாள் (பயணத்) தொலைவில் அமைந்துள்ள ஓர் ஊராகும். அடுத்து ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஸலைமாவை வெற்றி கொண்டார்கள். ஸலைமாவும் ஹமாத்திலிருந்து இரண்டு நாள் பயணத் தொலைவில் அமைந்துள்ள ஓர் ஊராக இருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 333 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 345 & மஜ்மவுல்

பல்தான் தொகுதி 3 பக்கம் 272)

இதன் பிறகு லாஸிகிய்யா வெற்றி நடந்தது. அது 14 ஆம் ஹிஜ்ரியில் நடந்தது. இஸ்லாமிய படை ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் படையின் தலைமையில் லாஸிகிய்யாவை நோக்கி புறப்பட்டது. லாஸிகிய்யா சிரியாவின் ஒரு நகரமாகும். அது கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. ஹிம்ஸின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம். லாஸிகிய்யாவாசிகள் இஸ்லாமிய படை தங்களை நோக்கி வருவதைக் கண்டனர். அப்போது அவர்கள் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே அமர்ந்து கொண்டனர். நகரத்தின் வாசல்களை அடைத்துக் கொண்டு போரிட ஆயத்தமாகினர். முஸ்லிம்கள் அவர்களை சுற்றி வளைத்து விட்டால் அவர்களை எதிர்கொள்வதற்கு ஆற்றல் இருப்பதாகவும், மேலும் அதற்குள் கடல் வழியாக தங்களுக்கு ஹர்குல் அரசரிடமிருந்து உதவிப் படை வந்தடைந்து விடும் என்றும் அவர்களுக்கு மன நிறைவு ஏற்பட்டிருந்தது. முஸ்லிம்கள் அந்த நகரத்தை முற்றுகையிட்டு விட்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளின் அடிப்படையில் இந்த நகரம் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. மேலும் ராணுவ முகாம்களின் காரணமாக அந்த நகரம் மிகவும் பிரபலமானதாக இருந்தது. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் அதனை வெற்றி கொள்வதற்காக ஒரு புதிய திட்டத்தை தீட்டினார்கள். ஏனென்றால் அன்னார் போர் யுக்திகளை அறிந்திருந்தார்கள். அதனை வெற்றி கொள்வது மிகவும் கடினமாகும் என்பதை அன்னார் உணர்ந்திருந்தார்கள். அவர்கள் எதிர்ப்பதற்காக முகாமிட்டு விட்டால் பின்னர் நீண்ட நேரம் வரை தாக்குப்பிடிப்பார்கள். மேலும் முற்றுகை நீண்ட காலம் தொடர்ந்திருந்தால் இடைப்பட்ட காலத்தில் எதிரியிடமிருந்து அவர்களுக்கு உதவி கிடைத்து விடும். எனவே ஒன்று தோல்வியுற்று திரும்ப வேண்டும். அல்லது நகரத்தின் முற்றுகையை நீண்ட காலம் வரை நீட்டிக்க வேண்டும். அப்போது அன்தாகிய்யா செல்வது சாத்தியமற்றதாகி விடும் என்பதை அன்னார் உணர்ந்திருந்தார்கள்.

அன்னார் போர் மைதானத்தில் எராளமான பதுங்கு குழிகளை எந்த அளவிற்கு உருவாக்கினார்கள் என்றால் அவற்றுள் குதிரை சவாரிகளில் அமர்ந்து கொள்ளவும் முடியும். அதில் ஒளிந்து கொள்ளவும் முடியும். மேலும் அதற்கு மேல் புல் விரிக்கப்பட்டு அது மறைக்கப்பட்டது. மேலும் காலையில் முற்றுகையை அகற்றி விட்டு ஹிம்ஸை நோக்கி முன்னேறி விட்டார்கள். நகர வாசிகள் முற்றுகை விலக்கி கொள்ளப்பட்டதை பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் மன நிறைவுடன் நகரத்தின் வாசல்களை திறந்து விட்டனர். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இரவோடு இரவாக தமது படையுடன் திரும்பி வந்து விட்டார்கள். மேலும் குகைகளைப் போன்ற அந்த பதுங்கு குழிகளில் ஒளிந்து கொண்டார்கள். காலையில் நகரத்தின் வாசல்கள் திறக்கப்பட்டதும் முஸ்லிம்கள் அதன் மீது தாக்குதல் தொடுத்தனர். சில முஸ்லிம்கள் நகரத்தின் வாசல்களை கைப்பற்றி விட்டனர். அந்த வாசல்கள் கோட்டைக்கு வெளியில் இருந்தன. எதிரிகள் அங்கிருந்து ஓடுவதையே நலம் என்று கருதினர். மேலும் நகரத்தில் உள்ளே இருந்தவர்களிடம் அச்சம் தொற்றிக் கொண்டது. எனவே நகரத்திலிருந்த ஒவ்வொருவரும் தப்பிப்பதற்குரிய வழிகளை தேடத் தொடங்கினர். கட்டுப்படுதல் மற்றும் சமாதானத்தை தவிர்த்து அவர்களிடம் வேறு எந்த வழியும் இருந்திருக்கவில்லை. எனவே அவர்கள் சமாதானம் செய்து கொண்டனர். ஓடியவர்கள் அடைக்கலம் வேண்டினர். முஸ்லிம்கள் நகரத்தினுள் நுழைந்து நகரத்தை வெற்றி கொண்டு விட்டனர். ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜராஹ் (ரலி) அவர்கள் ஜிஸ்யா வரியின் கீழ் சமாதானம் செய்து கொண்டார்கள். மேலும் அவர்களின் தேவாலயங்களை அவர்களின் கட்டுப்பாட்டிலேயே விட்டு விட்டார்கள். பிற்காலத்தில் முஸ்லிம்கள் அதற்கு அருகிலேயே தமது ஒரு பள்ளிவாசலை கட்டிக் கொண்டனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 333, 334 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 118, 119 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேற்கொண்டு எந்த முன்னெடுப்பும் இந்த வருடம் செய்ய வேண்டாம் என்று எழுதினார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 119 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

கின்னஸரீன் வெற்றி உள்ளது. இது 15 ஆம் ஹிஜ்ரி ஆண்டில் நடைபெற்றது. ஹஸரத் அபூஉபைதா பின் ஜராஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை கின்னஸரீன் என்ற இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அது ஹலப் என்ற மாநிலத்தின் ஒரு ஒளிரும் நகரமாக இருந்தது. ஹலப் செல்லும் வழியில் மலைகளுக்கு மத்தியில் கின்னஸரீன் கோட்டை அமைந்திருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹாலிர் என்ற இடத்திற்கு அருகில் சென்றடைந்தார்கள். ஹாலிர் என்பதும் ஹலபிற்கு அருகிலுள்ள ஓர் இடமாகும். அந்த இடத்தில் ரோமானியர்கள் மீனாஸ் என்பவனின் தலைமையில் அன்னாரை எதிர்கொள்வதற்காக வந்து விட்டனர். ஹிர்குலிற்குப் பிறகு ரோமானியர்களின் மிகப்பெரிய படைத் தளபதியாக மீனாஸ் இருந்தான்.

எவ்வாறிருப்பினும் அங்கிருந்த மக்கள் அரேபிய கிறிஸ்தவர்களாக இருந்தனர். அந்த மக்கள் முஸ்லிம்களை எதிர்கொண்டனர். நகரத்தின் பாதுகாப்பிற்காக நகரத்திலிருந்து வெளியேறி முகாமிட்டுக் கொள்வது அரபுகளின் வழக்கமாக இருந்தது. எனவே இந்த கிறிஸ்துவ அரபிகளும் அதே வழிமுறையின்படி வெளியில் கூடாரங்களை அமைத்தனர். கடுமையான போருக்குப் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ரோமானியர்களின் ஏராளமான படை வீரர்களை கொன்றிருந்தார்கள். மேலும் மீனாஸ் என்ற அவர்களின் தலைவனையும் கொன்று விட்டார்கள். மேலும் நாங்கள் அரபு மக்கள் ஆவோம். போர் செய்வதற்கு நாங்கள் விரும்பவில்லை. எங்களை வலுக்கட்டாயமாக இந்தப் போரில் சேர்த்துக் கொண்டனர். எனவே எங்களை மன்னித்து விட வேண்டும் என்று தூதுச் செய்தியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களுக்கு அந்த நகர்ப்புற வாசிகள் அனுப்பி வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களின் அந்த காரணங்களை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அவர்களுக்கெதிராக தங்களின் கரங்களை தடுத்து நிறுத்தி விட்டார்கள். சில ரோமானியர்கள் தப்பியோடி கினஸ்ஸிரீன் என்ற கோட்டையில் தாழிட்டுக் கொண்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களை பின்தொடர்ந்தார்கள். ஆனால் அவர்கள் கினஸ்ஸரீன் என்ற இடத்தை அடைந்தபோது ரோமானியர்கள் நகரத்தின் வாசல்களை அடைத்திருந்தனர். இதைக் கண்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்களிடம் இந்த தூதுச் செய்தியை அனுப்பி இருந்தார்கள். அதாவது நீங்கள் மேகங்களிலேயே சென்று மறைந்து கொண்டாலும் அல்லாஹ் எங்களை உங்களிடம் வந்தடையச் செய்து விடுவான். அல்லது உங்களை எங்களிடம் வீசி விடுவான். சில நாட்கள் வரை கோட்டை அப்படியே அடைக்கப்பட்டிருந்தது. ஆனால் இறுதியில் கினஸ்ஸரீன் வாசிகளுக்கு நம்பிக்கை இழந்தனர். அதாவது இனி தப்பிப்பதற்கு எந்த வழியும் இல்லை என்பதை புரிந்து கொண்டனர். எனவே ஹிம்ஸ் சமாதான நிபந்தனையின் கீழ் தங்களுக்கு அடைக்கலம் வழங்கப்பட வேண்டும் என்று விண்ணப்பித்திருந்தனர். ஆனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களுக்கு தண்டனையளிக்க முடிவு செய்திருந்தார்கள். எனவே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நகரத்தை அழிப்பதை தவிர்த்து வேறு எந்த விஷயத்திலும் திருப்தி கொள்ளவில்லை. கினஸ்ஸரீன் வாசிகள் தங்களது செல்வங்களையும், உடைமைகளையும், குடும்பத்தினரையும், தக்தீரிடம் ஒப்படைத்து விட்டு அம்தாகியா என்ற இடத்திற்கு ஓடி விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூஉபைதா பின் அல்ஜராஹ் (ரலி) அவர்கள் கினஸ்ஸரீன் என்ற இடத்தை வந்தடைந்தபோது அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் இந்த தீர்ப்பை நீதிக்கு ஏற்புடையதாக கண்டார்கள். நகரத்தின் கோட்டைகள் மற்றும் ஏனைய படைத்தளங்களை மூடி விடும்படி கூறினார்கள். அதன் பிறகு நீதியுடன் பரிவு காட்டப்பட வேண்டுமென்று அவர்கள் உணர்ந்தார்கள். எதிரிகளுடன் செய்யப்பட்ட நீதியாக இது இருந்தது. தற்போது பரிவும் காட்ட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். எனவே நகரவாசிகளின் விண்ணப்பத்திற்கேற்ப அவர்களுக்கு அடைக்கலம் வழங்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். மேலும் நகரத்திலிருந்த வீடுகளும் பங்கிடப்பட்டதாக கூறப்படுகிறது. தேவாலயங்களும், வீடுகளும் பங்கிடப்பட்டன. பாதி பகுதியை முஸ்லிம்கள் கைப்பற்றிக் கொண்டனர். பாதி பகுதி அவர்களிடமே இருந்தது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது. நகரத்தின் சில நிலங்களை எடுத்துக் கொண்டு அங்கு பள்ளிவாசல் கட்டப்பட்டது. ஏனைய அனைத்தும் வழக்கம்போல் உள்ளூர் வாசிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்படி செய்யப்பட்டது.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அன்தாகிய்யா என்ற இடத்திற்கு தப்பியோடிய மக்களும் ஜிஸ்யா வரியை ஒப்புக் கொண்டு திரும்பி வந்து விட்டார்கள். ஏனைய வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளைப் போன்று இங்குள்ள மக்களிடமும் சிறப்பாக நடந்து கொள்ளப்பட்டது. சரியான சமத்துவத்தின் அடிப்படையில் அவர்களுக்கு மத்தியில் நீதி நிலைநாட்டப்பட்டது. அதில் எந்தவொரு வலிமை படைத்த மனிதரும் பலவீனமானவரின் மீது அநீதியும், அக்கிரமும் செய்ய முடியாமல் இருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 333–339 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 445 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 238 – 2007 பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து கைஸாரிய்ய வெற்றி உள்ளது. இதுவும் ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டின் சம்பவமாகும். கைஸாரிய்யா சிரியாவின் கடற்கரை நகரமாகும். அது தபரிய்யாவிலிருந்து மூன்று பகல் பயணத் தொலைவில் அமைந்திருந்தது. இந்தப் போர் எந்த ஆண்டு நிகழ்ந்தது என்பது பற்றி பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. 15 வது ஹிஜ்ரியில் நடந்ததாக ஓர் அறிவிப்பு உள்ளது. மற்றொரு கூற்றிற்கேற்ப ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. மூன்றாவது அறிவிப்பிற்கேற்ப ஹிஜ்ரி 19 ஆம் ஆண்டும், நான்காவது அறிவிப்பிற்கேற்ப ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டும் நிகழ்ந்தது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 511 ஹிஜ்ரி 19 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 478 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் வடக்கு ரோமில் வெற்றிக்கான முன்னெடுப்பை செய்து வந்தபோது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் மற்றும் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களும் ரோமானியர்களின் ஒரு படையுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அந்த ரோமானியர்களின் படையானது பாலஸ்தீனத்தில் ஒன்றுகூடியிருந்தது. எனவே அவர்கள் அந்தப் படையை தோற்கடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஆனால் அது ஒன்றும் எளிய பணியாக இருக்கவில்லை. இந்தப் படை, எண்ணிக்கை மற்றும் அதன் ஏற்பாடுகளின் அடிப்படையில் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. மேலும் அந்த ரோமானிய படையை தரபூன் என்ற மிகவும் வலிமை வாய்ந்த படைத்தளபதி தலைமை தாங்கிக் கொண்டிருந்தான். அந்தப் படைக்கு எதிரில் எந்த எதிரியும் நிற்பதற்கு முன் வரவில்லை. ஸமாம் நகரத்தின் ஆளுமையும் தனது கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்பதற்காக அவன் படையை பல்வேறு இடங்களுக்கு பிரிந்து செல்லும்படி செய்திருந்தான். அந்தப் படையின் சில பகுதிகளின் மீது சில அரபிகள் வெற்றி கொண்டு விட்டாலும் ஏனைய பகுதியின் மீது அதன் தாக்கம் இருக்கக்கூடாது என்று அவன் எண்ணினான். எனவே அவன் ரம்லா மற்றும் அதேபோன்று ஏலியாவின் ஒரு படையை ஆயத்தப்படுத்தினான். மேலும் அதன் உதவிக்காக கஸ்ஸா, ஸப்தியா, நாபுலேஸ், லுஸ்ஸா மற்றும் யாஃபா ஆகிய இடங்களில் படைகளை அனுப்பினான்.

அதன் பிறகு அரபிகள் வருவதற்காக காத்திருந்து அமர்ந்து விட்டான். மேலும் அரபிகளை வெற்றி கொள்வதற்கும், அவர்களின் ஆற்றல்களை சிதறடிப்பதற்கும் நமக்கு வலிமை இருக்கின்றது என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தை சரியாக உணர்ந்து வந்தார்கள். அவர்கள் இவ்வாறு சிந்தித்தார்கள். அதாவது அவன் தனது அனைத்து படைகளுடன் அத்ரபூன் என்ற இடத்தில் போருக்காக அணி திரண்டாலும் ரோமானிய படைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து விடும். அந்நிலையில் அவர்களை வெற்றி கொள்ள முடியாது. மாறாக, தங்களை ரோமானியர்கள் வெற்றி கொள்ள முடியும் என்று நினைத்தார்கள். எனவே அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யஸீத் பின் அபூசுஃப்யானை அனுப்பி வைத்தார்கள். மேலும் உங்களது சகோதரர் முஆவியை கைஸரிய்யா வெற்றி கொள்வதற்காக அனுப்பி வையுங்கள். ஏனென்றால் கடல் வழியில் அக்ரபூனிற்கு உதவி கிடைத்து விடக்கூடாது என்று கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அமீர் முஆவியாவின் பெயரை எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களை கைஸரிய்யாவிற்கு அமீராக்குகின்றேன். அங்கு செல்லுங்கள். மேலும் அதற்கு எதிரில் அல்லாஹ்விடம் உதவி வேண்டுங்கள்.

لَاحَوْلَ وَلَاقُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

اَللّٰهُ رَبُّنَا وَثِقَتُنَا وَرَجَاؤُنَا وَمَوْلٰنَا، نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ

என்ற துஆவை அதிகமாக ஓதுங்கள். அதாவது பாவங்களிலிருந்து தப்பிக்கும் ஆற்றலும், நன்மையை செய்வதற்குரிய வலிமையும் அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது. அவன் மிகுந்த கண்ணியம் கொண்டவனும், மிகவும் மகத்துவமிக்கவனும் ஆவான். அல்லாஹ் நமது இறைவன் ஆவான். மேலும் அவன் மீதே நமது நம்பிக்கை உள்ளது. மேலும் அவன் நமது நம்பிக்கைக்குரியவன் ஆவான். அவன் நமது எஜமானன் ஆவான். அவன் மிகச் சிறந்த எஜமானனும், மிகச்சிறந்த உதவியாளனாகவும் இருக்கின்றான்.

அல்ஃபாரூக்கில் எழுதப்பட்டுள்ளது. கைஸாரிய்யா அவ்வல் ஹிஜ்ரி 13 ஆவது ஆண்டில் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் போர் தொடுத்தார்கள். நீண்ட காலம் வரை முற்றுகையிட்டு தங்கியிருந்தார்கள். ஆயினும் வெற்றி கொள்ள முடியவில்லை. அபூஉபைதாவின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யஸீத் பின் அபூசுஃப்யான் அவர்களை அந்த இடத்தில் நியமனம் செய்தார்கள். மேலும் கைஸாரிய்யாவின் திட்டத்தில் செல்லும்படி கட்டளையிட்டார்கள். யஸீத் அவர்கள் 17000 படை வீரர்களுடன் புறப்பட்டார்கள். மேலும் நகரத்தை முற்றுகையிட்டார்கள். ஆனால் ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டு நோயுற்றபோது தமது சகோதரரான அமீர் முஆவியாவை தனது பிரதிநிதியாக நியமனம் செய்து விட்டு டமாஸ்கஸிற்கு திரும்பி வந்து விட்டார்கள். அங்கேயே அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். கைஸாரிய்யா நகரம் சிரியா கடற்கரையில் அமைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் அந்த இடம் காலியாக உள்ளது. ஆனால் அந்த காலத்தில் அது மாபெரும் நகரமாக இருந்தது. பலாதரி என்பவரின் கூற்றிற்கேற்ப 300 கடை வீதிகள் அங்கு அமைந்திருந்தன. அதன் பாதுகாப்பு பணியில் ஒரு மாபெரும் ரோமானிய படை நியமிக்கப்பட்டிருந்தது. அங்கு மிகவும் அபாயகரமான மற்றும் வலிமை வாய்ந்த கோட்டை இருந்தது. ஹஸ்ரத் முஆவியா அவர்கள் கைஸாரியாவை சென்றடைந்து அதனை சுற்றி வளைத்து விட்டார்கள். ரோமானியர்கள் சில சமயம் இஸ்லாமிய படையின் மீது தாக்குதல் தொடுத்து வந்தார்கள். ஆனால் தோல்வியுற்று தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விடுவார்கள். இறுதியில் முற்றுகை நீண்டு விட்டபோது ஒரு நாள் அழித்தொழிப்பதற்காக அவர்கள் வெளியேறினர். ஆனால் தோல்வி கண்டனர். எந்த அளவிற்கு படிப்பினை மிகுந்த தோல்வியைக் கண்டனர் என்றால் போர் மைதானத்தில் அவர்களின் 80000 போர் வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கையுடன் தோல்வியுற்ற தப்பியோடிய வீரர்களை சேர்த்துக் கொண்டால் ஒரு லட்சத்தை அடைந்து விடும்.

கைஸாரிய்யாவின் வெற்றி மற்றும் அவர்களின் படையின் அழிவிற்குப் பிறகும் முஸ்லிம்கள் இந்த பகுதியில் மன நிறைவும் பாதுகாப்பும் பெற்றனர். இந்த வழிப்பாதையிலிருந்து ரோமானியர்களுக்கான உதவிப் படை செல்லும் தொடர் தடை பட்டது. ஹஸ்ரத் முஆவியா அவர்கள் போர் செல்வங்களில் ஐந்தில் ஒரு பகுதியை வெற்றியின் செய்தியுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு அறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் அமீர் முஆவியா அவர்கள் மாபெரும் ஏற்பாடுகளுடன் முற்றுகையிட்டார்கள். நகரவாசிகள் பல முறை கோட்டையை விட்டு புறப்பட்டு வெளியே வந்து சண்டையிட்டார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் தோல்வி கண்டார்கள். இருந்தபோதிலும் அவர்களால் நகரத்தை கைப்பற்ற முடியவில்லை. யூசுஃப் என்ற பெயர் கொண்ட யூதன் இருந்தான். அவன் அமீர் முஆவியா அவர்களிடம் வந்து ஒரு சுரங்கப்பாதையின் அடையாளத்தைக் கொடுத்தான். அது நகரத்திற்குள் கோட்டையின் வாசல் வரை அமைந்திருந்தது. எனவே சில வீரர்கள் அந்த வழியாக கோட்டைக்கு உள்ளே சென்றடைந்து கதவை திறந்து விட்டனர். மேலும் அத்துடன் முழு படையும் தாக்குதல் நடத்தியது. வெற்றியும் கிடைத்தது.

ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்கள் பத்ர் போர் சஹாபிகளில் ஒருவராக இருந்தார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

அன்னாரும் இந்தப் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னாரின் வீரத்தைக் குறித்த சம்பவம் கஸாரிய்யா போரில் நமக்கு இவ்வாறு கிடைக்கின்றது. கைஸாரிய்யா முற்றுகையிடப்பட்ட இடத்தில் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையின் மைமனா பிரிவின் தலைவராக இருந்தார்கள். அன்னார் தனது படைக்கு அறிவுறுத்துவதற்காக எழுந்து நின்றார்கள். பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கும், தம்மை ஆய்வு செய்வதற்கும் அன்னார் கட்டளையிட்டார்கள். பின்னர் முஜாஹித்களில் ஒரு கூட்டத்தை அழைத்துக் கொண்டு முன்னேறினார்கள். ஏராளமான ரோமானியர்களை கொலை செய்தார்கள். ஆனால் தமது நோக்கத்தில் முழுமையான முறையில் வெற்றி பெற முடியவில்லை. மீண்டும் தமது இடத்திற்கு திரும்பி வந்தார்கள். தமது தோழர்களுக்கு சண்டையிடுவதற்கும் மரணிப்பதற்கும் உத்வேகம் வழங்கினார்கள். மேலும் தம்முடன் இத்தனை எண்ணிக்கையில் கூட்டத்தை கூட்டிக் கொண்டு தாக்குதல் நடத்திய பிறகும் தோல்வியுடன் திரும்பியதை எண்ணி மிகுந்த ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் இஸ்லாமிய தளபதிகளே பைத்தே உக்பாவில் பங்கு பெறக்கூடிய நபர்களில் நான் மிகவும் சிறிய வயதை உடையவனாக இருந்தேன். ஆனால் இன்று எனக்கு அனைவரையும் விட நீண்ட ஆயுள் கிடைத்துள்ளது. அல்லாஹ் எனக்கு ஆதரவாக தீர்ப்பளித்தான். மேலும் என்னை உயிருடன் வைத்தான். எந்த அளவுக்கென்றால் இன்று இங்கு உங்களுடன் நான் அந்த எதிரியுடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றேன். எனது உயிர் எந்த இறைவனின் கரங்களில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் நம்பிக்கையாளர்களின் கூட்டத்தை அழைத்துக் கொண்டு இணைவைப்பவர்களின் கூட்டத்தினரின் மீது எப்போதெல்லாம் தாக்குதல் தொடுத்தேனோ அவர்கள் நமக்காக போர் மைதானத்தை காலி செய்து விட்டார்கள். அதாவது நமக்கு வெற்றி கிடைத்துள்ளது. அல்லாஹ் அவர்கள் மீது நமக்கு வெற்றியை வழங்கினான். ஆனால் நீங்கள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தீர்கள். ஆயினும் அவர்களை அங்கிருந்து அகற்ற முடியவில்லை. இது என்ன விஷயம்?

அடுத்து இது குறித்து அவர்களிடமிருந்த அச்சத்தை இந்த சொற்களில் அன்னார் எடுத்துரைத்தார்கள்: நான் உங்களைக் குறித்து இரண்டு விஷயங்களில் அச்சம் கொள்கின்றேன். ஒன்று உங்களில் ஒரு நம்பிக்கைதுரோகி உள்ளார். அல்லது நீங்கள் தாக்குதல் தொடுத்தீர்கள் என்றால் கலப்படமற்ற எண்ணத்துடன் தாக்குதல் நடத்தவில்லை. ஒன்று, நம்பிக்கை துரோகி ஆவீர்கள். அல்லது அந்த நேரத்தில் தூய்மை இருக்கவில்லை. அதாவது தாக்குதல் நடத்தியபோது. இதன் பிறகு உண்மையான உள்ளத்துடன் ஷஹாதத்தை வேண்டுமாறு அன்னார் அறிவுரை செய்தார்கள். நான் உங்களில் முன்னணியில் இருப்பேன். ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். எந்த அளவுக்கென்றால் அல்லாஹ் வெற்றியை வழங்கி விட வேண்டும். அல்லது ஷஹாதத் மரணத்தை வழங்கி விட வேண்டும். எனவே ரோமானியர்களும், முஸ்லிம்களும் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். அப்போது உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் தமது குதிரையிலிருந்து குதித்து கீழே இறங்கி நடந்து சென்றார்கள்.

உமைரா பின் சஅத் அன்ஸாரி அவர்கள் அன்னார் நடந்து செல்வதைப் பார்த்தபோது படையின் அமீர் நடந்து செல்கின்ற விஷயத்தை முஸ்லிம்களிடத்தில் பரப்பினார். மேலும் அனைத்து மக்களும் அவர்களைப் போன்றே ஆகிவிடுங்கள் என்று கூறினார். எனவே அனைவரும் ரோமானியர்களுடன் மிகக் கடுமையாக சண்டையிட்டார்கள். மேலும் அவர்களைத் தோற்கடித்து விட்டார்கள். இறுதியில் அந்த ரோமானியர்கள் தோற்று ஓடி நகரத்தினுள் இருந்த கோட்டைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டார்கள்.

எவ்வாறு அரபிகள் கைஸரிய்யாவை கைப்பற்றினார்களோ அதேபோன்று இந்தப் போரிலும் வெற்றி கொண்டார்கள். சித்தீக்கி காலகட்டத்திலும் முஸ்லிம்கள் ஒரு முறை ஜஸாவை கைப்பற்றி இருந்தனர். ஆனால் பிற்காலத்தில் அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இந்த இரண்டு எல்லைப்புறங்களும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தவுடன் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு கடல் புறத்திலிருந்து மன நிறைவு ஏற்பட்டிருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 357–359 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 735, 736, 744, 745– பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்ட் கான் கட், முஸஃப்பர் கட் மாவட்டத்தில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 140, 141 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இந்தக் கதைகளும், சம்பவங்களும் மேலும் தொடர்ந்து கொண்டிருக்கும். தற்போது மர்ஹூம்களின் நற்குறிப்பையும் நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அவர்களின் ஜனாஸா தொழுகைகளை ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் தொழ வைப்பேன்.

முதலாவது நற்குறிப்பு கேரளாவின் முன்னாள் முபல்லிக் மதிப்பிற்குரிய கே.முஹம்மது அலவி சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய கதீஜா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் 80 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னாரின் தந்தையாரான முஹைதீன் சாஹிப் கேரளாவின் ஆரம்ப கால அஹ்மதிகளைச் சார்ந்தவர் ஆவார். மர்ஹூமாவிற்கும் மிகச் சிறிய வயதிலேயே அஹ்மதிய்யத்தில் நுழைவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. மிகவும் பொறுமைசாலியான பெண்மணியாகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும், நோன்பு மற்றும் தொழுகைகளை பேணக் கூடியவராகவும், நேர்மையாளராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், போதுமென்ற மனம் கொண்ட பெண்மணியாகவும் இருந்தார்கள். மர்ஹூமாவின் கணவர் ஜமாஅத்தின் முபல்லிக் ஆக இருந்தார். பல நாட்கள் சுற்றுப் பயணத்தின் காரணமாக வெளியூரிலேயே தங்கி இருப்பார்கள். ஆனால் மர்ஹூமாவிடம் எப்போதும் நன்றியுணர்வு இருந்தது. ஒருபோதும் முறையீடு செய்ததில்லை.

மர்ஹூமா தமக்குப் பிறகு தமது நினைவாக இரண்டு மகன்களையும், ஐந்து மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் மூத்த மகன் கே.மஹ்மூது சாஹிப் ஜமாஅத்தின் முபல்லிக் ஆக இருந்தார்கள். அன்னார் 54 வயதில் சிறுநீரகம் செயலிழந்ததன் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். அன்னாரின் சிறிய மகனும் ஜமாஅத்தின் முஅல்லிம் ஆவார். ஐந்து மகள்களுக்கும், முரப்பிமார்களுடனேயே திருமணம் நடைபெற்றுள்ளது. அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு கோட் ஃபத்ஹே கானைச் சேர்ந்த மலிக் சுல்தான் ரஷீத் கான் சாஹிப் அவர்களுடையதாகும். அடக் மாவட்டத்தின் முன்னாள் அமீராக அன்னார் இருந்தார்கள். மலிக் சுல்தான் ரஷீத் கான் சாஹிப் ஆகஸ்ட் 22 மற்றும் 23 ஆம் தேதிக்கு மத்திய இரவில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் கர்னல் மலிக் சுல்தான் முஹம்மது கான் சாஹிப் 23 வது வயதில் 1923 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்திருந்தார்கள். தனது குடும்பத்தில் தனி அஹ்மதியாக இருந்தார்கள். பின்னர் சவுத்ரி ஃபத்ஹே முஹம்மது சாஹிப் ஸியால் அவர்களின் மகளான ஆயிஷா சித்தீக்கா சாஹிபாவுடன் அன்னாரின் திருமணம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தான் இந்த திருமணத்தை நடத்தி வைத்தார்கள். சுல்தான் ரஷீது சாஹிப் அவர்களின் தந்தைவழிப் பாட்டனாரின் பெயர் மலிக் சுல்தான் சர்கரு கான் சாஹிப் ஆகும். அன்னாருக்கு பிரித்தானியாவின் அரசவையில் உயர்ந்த அந்தஸ்து கிடைத்திருந்தது. அரசவையில் அவருக்கு இருக்கை வழங்கப்பட்டிருந்தது. தனது மகனான மலிக் சுல்தான் முஹம்மது கான் சாஹிப் அவர்கள் பைஅத் செய்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அன்னாருக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது.

மலிக் சுல்தான் ரஷீத் கான் சாஹிப் ஜமாஅத்திற்கு ஆற்றிய தொண்டுகள் இவ்வாறாகும்: 96 முதல் 99 வரையிலும் பின்னர் 2005 முதல் 2014 வரையிலும் அடக் மாவட்டத்தின் அமீராக தொண்டாற்றும் நற்பேறு அவருக்கு கிடைத்து. மரண நேரத்திலும் அன்னார் கோட் ஃபத்ஹே கான் ஜமாஅத்தின் சதராக இருந்தார்கள். மேற்கு பாகிஸ்தானின் முன்னாள் கவர்னரான அமீர் முஹம்மது கானின் உறவினராக அன்னார் இருந்தார்கள். ஆயினும் அந்தக் குடும்பம் உலக விவகாரங்களில் மூழ்கிய

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

குடும்பமாக இருந்தது. அன்னாரின் தந்தையார் அஹ்மதியான பிறகு உலக விவகாரங்களை முற்றிலும் கைவிட்டு விடவில்லை. எனினும் உலகத்தில் இருந்தவாறே மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். மலிக் சுல்தான் ரஷீத் கான் சாஹிப் அவர்களிடமும் இதே நற்பண்புகள் இருந்தன. அன்னார் முதலில் துவக்கத்தில் 1/10 வஸிய்யத் செய்திருந்தார்கள். பின்னர் 1/7 வஸிய்யத் செய்து விட்டார்கள். அடுத்து (அதே அளவில்) சொத்துக்களின் பங்கையும் வழங்கி விட்டார்கள்.

அன்னாரின் சகோதரி ராஷிதா ஸியால் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எனக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள். உங்களது தந்தையார் அஹ்மதிய்யத்தின் சிறந்த வாளாக இருந்தார்கள். உங்களின் சகோதர்களிடமும் இதே வடிவம் தான் காணப்படுகிறது.

அடுத்து மலிக் சுல்தான் ரஷீத் சாஹிப் அவர்களைப் பற்றி கூறுகின்றார்கள்: எங்களது சகோதரருக்கு கிலாஃபத்துடன் மிகவும் ஆழமான தொடர்பு இருந்தது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒவ்வொரு கட்டளையை உடனே செயல்படுத்துவார்கள். அல்லாஹ்வின் அருளாலும், கருணையாலும் அன்னார் கிலாஃபத்திற்குரிய நம்பிக்கைக்குரிய தொண்டராக இருந்தார்கள். முழுமையான ஆர்வத்துடன் தொண்டாற்றி வந்தார்கள். அன்னாரிடம் ஆன்மீகமும் முழுமையாக நிறைந்திருந்தது. அவர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு உலக விவகாரங்களில் எந்தத் தொடர்பும் இல்லை என்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது. மிக அதிகமான முறையில் பணிவை மேற்கொள்ளக்கூடியவராக அன்னார் இருந்தார்கள். அல்லாஹ்வுடன் தமக்கு இருந்த தொடர்பைக் குறித்து அதிகமாக பேச மாட்டார்கள். ஆயினும் அல்லாஹ்வுடன் அவர்களுக்கு மிகுந்த தொடர்பு இருந்தது. அன்னாரின் பகலும், இரவும் அனைவருக்கான துஆக்களால் நிரம்பி இருந்தது. அவர் நண்பராகவோ, உறவினராகவோ அல்லது அறியாதவராகவோ இருந்தாலும் சரியே. நண்பர்கள், குடும்பத்தினர்கள், அந்நியர்கள் யாராக இருப்பினும் அவர்களில் எவரும் அன்னாரின் வீட்டிலிருந்து வெறும் கையுடன் திரும்பியது கிடையாது. அன்னாரின் வள்ளல் தன்மையிலிருந்து பல நபர்கள் ஆகுமற்ற முறையில் பயனும் பெற்றுள்ளனர். அவர்களில் எவரையும் நிராகரித்தது கிடையாது.

ஒரு பெண்மணி எனது அண்ணன் மகளிடம் வந்தார். அவர் இவ்வாறு கூறினார்: சுல்தான் ரஷீத் சாஹிப் அவர்களின் பணத்தின் மூலமாக அடுப்பு எரிந்து வந்த தேவையுடையவர்களின் நிலை இனி என்னவாகும்? என்று கூறினார். அதாவது உணவும், அவர்களின் வாழ்க்கையும் சுல்தான் ரஷீத் சாஹிப் அவர்களின் உதவியால் இருந்து வந்தது. அன்னார் எந்த அளவிற்கு வள்ளல் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதன் உண்மையான ஞானம் நமக்கு இல்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது அண்ணன் மகள் ஒரு நாள் அன்னாரிடம் இவ்வாறு கேட்டார்: தாங்கள் மக்களுக்கு இந்த அளவிற்கு தொண்டாற்றுகின்றீர்கள். அவ்வாறிருக்க மக்கள் அதனை கண்ணியப்படுத்துவர்களா? நினைவில் வைப்பார்களா? என்று கேட்டபோது அன்னார் இவ்வாறு கூறினார்கள்: அவர்கள் என்னை நினைவில் வைக்க வேண்டாம். ஆனால் அல்லாஹ் என் மீது திருப்தி கொள்ள வேண்டும் என்பது மட்டுமே எனது நிய்யத் ஆகும் என்று பதிலளித்தார்.

அன்னாரின் ஒரு சகோதரியான நயீமா சாஹிபா கூறுகின்றார்கள்: தப்லீக்கில் எனது சகோதரருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. ஏராளமான நல்லடியார்களின் நேர்வழிக்கு காரணியாக இருந்துள்ளார். சந்திக்க வரக்கூடிய ஒவ்வொருவரிடமும் தப்லீக்கிற்கான சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொள்வார். அஹ்மதி அல்லாத நண்பர்கள் பெரும்பாலும் மாலையில் வருவார்கள். பல மணி நேரம் வரை மஸீஹின் மரணம் குறித்து விவாதம் நடைபெறும். ஆயினும் அவர்கள் மூலம் அபாயமும் இருந்தது. இறைவணக்கத்தில் ஆர்வமும், உத்வேகமும் விநோதமான வடிவத்தைக் கொண்டிருந்தது. பொதுவாக அறையின் கதவை அடைத்துக் கொண்டு தனிமையில் தனது இறைவனிடம் அழுது மன்றாடுவார். அல்லாஹ் கனவுகள் மற்றும் ஆன்மீக காட்சிகளையும் அன்னாருக்கு அருளியுள்ளான். ஒரு முறை யபட்ஆபாதில் கோடை விடுமுறையில் சென்றிருந்தார்கள். திடீரென ஒரு பொருளாதார கஷ்டத்தால் கவலைக்கு ஆளானார்கள். துஆவைத் தவிர்த்து எதுவும் செய்ய முடியாமல் இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: காலையில் நடைபயணமாக மரங்கள் நிறைந்த ஒரு அடர்ந்த இடத்தை கடந்தார்கள். அப்போது لَاتَقْنَطُوْامِنْ رَّحْمَةِاللّٰهِ என்று மிகவும் உரத்த மற்றும் தெளிவான குரல் வந்தது.

சுபைரி சாஹிப் அதாவது முன்னாள் அடக் மாவட்டத்தின் அமீர் சாஹிபின் மனைவி அவர்கள் மர்ஹூமின் சகோதரியிடம் இவ்வாறு கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலகட்டத்தில் மாவட்ட கூட்டத்திற்காக அன்னாரின் வீட்டில் தங்கியிருந்தேன். அப்போது முகத்தில் ஏதோ சிறிய கவலை இருந்தது. காரணம் கேட்டபோது ஒரு சொற்பொழிவாற்ற வேண்டும். ஆனால் முழுமையாக ஆயத்தம் செய்யவில்லை என்று கூறினார்கள். இரண்டாவது நாள் காலையில் மிகவும் முகமலர்ச்சியுடன் வந்தார்கள். காலை உணவிற்காக வந்தபோது கூறினார்கள்: இரவில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கனவில் வந்தார்கள். மேலும் முழு சொற்பொழிவையும் எனக்கு எழுதிக் கொடுத்து விட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ் எனது சொற்பொழிவு தயாராகி விட்டது.

அல்லாஹ்வின் மீது அன்னாருக்கு இருந்த உறுதியான நம்பிக்கையின் நிலை இவ்வாறு இருந்தது. கிராமத்தில் தனிமையாக எதிரிகளின் வீடுகளால் சூழப்பட்டிருந்தபோதும் முழுமையான மன உறுதியுடன், மன நிறைவுடன் வாழ்க்கையை கழித்து வந்தார்கள். அதன் எந்த அச்சமும் இருக்கவில்லை. எந்த பதற்றமும் அவரிடம் இல்லை. மிகவும் அசாதாரண வீரராக இருந்தார்கள். இறை கட்டளையின்றி இலை கூட அசையாது என்று கூறி வந்தார்கள்.

ஒரு முறை அன்னாரின் ஓர் ஊழியர் ஒரு யாசிப்பவரை திருப்பி அனுப்ப விரும்பினார். அப்போது அன்னார் அவருக்கு புரிய வைத்தார்கள். அல்லாஹ் என்னை ஒருவரின் ஊடகமாக ஆக்க விரும்பும்போது அவரை திருப்பி அனுப்ப நான் யார்? என்று கூறினார்கள். எல்லா வகையான அறிவார்ந்த உரையாடல்களிலும் புலமைப் பெற்றவராக இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை பல முறை படித்திருந்தார்கள். மாஷா அல்லாஹ் ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். தொழுகை மற்றும் நோன்பை பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், துஆ செய்பவராகவும், மிகவும் நுட்பமான முறையில் பேசக்கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள். எல்லா விஷயங்களையும் தப்லீகுடன் நிறைவு செய்யக்கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு இந்தோனேஷியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் கய்யூம் சாஹிப் அவர்களுடையதாகும். ஆகஸ்ட் 25 ஆம் தேதி அன்னார் 82 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡن

அன்னார் மவ்லானா அப்துல் வாஹித் சாஹிப் மர்ஹூமின் மகனாக இருந்தார்கள். மவ்லானா அப்துல் வாஹித் சாஹிப் இந்தியர் அல்லாத முதலாவது பாகிஸ்தான் முபல்லிக் ஆக இருந்தார்கள். இந்தோநேஷியாவின் ஒரு பிரபலமான தொழில்நுட்ப பள்ளியில் அன்னார் Chemical Engineering துறையில் பட்டம் பெற்றார்கள். அடுத்து அரசாங்க கல்வி உதவித்தொகை அடிப்படையில் உயர் கல்விக்காக ஃபிரான்ஸ் சென்றார்கள். பெட்ரோலியம் எகனாமிக்ஸ் துறையில் அங்கு சென்று மாஸ்டர் பட்டம் பெற்றார்கள். பின்னர் Ministry of Energy மற்றும் Mineral Resources துறையில் வேலை பார்த்தார்கள். அங்கு பல்வேறு பொறுப்புகளில் இடம் பெற்றிருந்தார்கள். ஓய்வு பெற்ற போதிலும் அந்த துறையில் நிபுணர் என்ற முறையில் அன்னாரிடம் பணிகள் பெறப்பட்டன. பின்னர் 72 வது வயதில் மிகுந்த உழைப்புடன் University of Indonesia விலிருந்து Chemical Engineering ல் Phd பட்டம் பெற்றிருந்தார்கள். அன்னார் நாட்டிற்காக மிகவும் சிறப்பான பணிகளை ஆற்றியுள்ளார்கள். 73 ஆம் ஆண்டில் அன்னார் அரசாங்கத்திற்கு Liquified Natural Gas குறித்து ஒரு ஃபார்முலாவைக் கொடுத்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அப்போதிருந்து அதாவது 1974 லிருந்து 2000 வரை அரசாங்கத்திற்கு அதன் காரணமாக 100 பில்லியன் டாலர்கள் லாபம் கிடைத்துள்ளது. எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் ஒவ்வொரு நாட்டிலும், இடத்திலும், சமுதாயத்திலும் தொண்டாற்றுவதற்கு எப்போதும் ஆயத்தமாக உள்ளனர். ஆனால் இந்தோநேஷியாவில் முல்லாக்களின் தாக்கத்தின் கீழ் சில பகுதிகளில் அஹ்மதிய்யத்திற்கு மிகக் கடுமையான எதிர்ப்பு இருக்கின்றது. இருப்பினும் நமது பணி என்னவென்றால், நாட்டிற்கு நன்றியுணர்வுடன் இருப்பது மட்டுமே ஆகும்.

அன்னாருக்கு Civil Servant என்ற அடிப்படையில் நாட்டின் மிக உயர்வான விருதும் கிடைத்துள்ளது. இந்தோநேஷியாவின் அரசாங்கம் இராணுவத்திற்கு வெளியில் அமைந்த துறைகளில் மிகச் சிறப்பாக செயல்படக்கூடியவர்களுக்கு வழங்கக்கூடிய இரண்டாவது பெரிய விருதை 2005 ஆம் ஆண்டு

அன்னாருக்கு வழங்கியுள்ளது. அவர்களின் சட்டத்திற்கேற்ப அவர்களின் ஹீரோக்கள் ஒரு இராணுவ அணிவகுப்பு நடக்கின்ற கப்ர்ஸ்தானில் அவர்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றார்கள். எவ்வாறிருப்பினும் மர்ஹூம் அங்கு நல்லடக்கம் செய்யப்பட விரும்பவில்லை. எனவே அன்னார் மரணமடைந்தபோது அந்த இராணுவ அணிவகுப்பு மக்பரா மூஸியான் பார்க்கிங்கில் நடைபெற்றுள்ளது. அங்கு அன்னார் மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மிகவும் அன்பு கொள்ளக்கூடியவராக இருந்தார்கள். தனது சகோதர, சகோதரிகளை கருத்தில் கொண்டார்கள். சகோதர, சகோதரிகளை கருத்தில் கொள்ளும்படி அன்னாரின் தந்தையார் அறிவுரை செய்திருந்தார்கள். எனவே அன்னார் அவ்வாறு செய்து வந்தார்கள். முரப்பிமார்கள் மற்றும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடன் மிகவும் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்து வந்தார்கள். அன்னாரின் சிறிய சகோதரர் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார்கள். மேலும் இந்தேநேஷிய ஜமாஅத் அமீராகவும் இருக்கின்றார்கள். தமக்கு கீழ் உள்ளவர்களிடமும் அன்னார் மிக நல்ல முறையில் நடந்துள்ளார்கள்.

அன்னாரின் ஓர் ஊழியர் இவ்வாறு கூறினார்: நான் 9 வயதிலிருந்து மர்ஹூமின் கண்காணிப்பில் இருந்து வருகின்றேன். எனது பள்ளிக்கூட கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளை மர்ஹூம் அவர்களே செலுத்தி வந்தார்கள். நல்ல நடைமுறையின் காரணமாக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களைப் படித்த பிறகு நானும் பைஅத் செய்து விட்டேன். மர்ஹூமின் கருணையும், வள்ளல் தன்மையும் மிகவும் உயர்தரமானதாக இருந்தது. எப்போதும் மக்களுடன் ஒன்றுபோல் நடந்து வந்தார்கள். ஒருபோதும் தன் மீது பெருமை கொண்டதில்லை. மேலும் தனது பொறுப்பின் மீதும் பெருமை கொண்டதில்லை.

அரசாங்க கேஸ் கம்பெனியில் அன்னாரின் முன்னாள் ஊழியர் ஒருவர் உள்ளார். அவர் கூறுகின்றார். மர்ஹூம் மிகுந்த புத்திசாலியாகவும், உறுதிப்பாட்டை கொண்டவராகவும், உழைப்பவராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மிகவும் பிரபலமானவராகவும், பெரிய அதிகாரியாகவும் இருந்தார்கள். ஆனால் அதன் பின்னரும் மிகுந்த பணிவுடையவராக இருந்தார்கள். கிலாஃபத்துடனும், ஜமாஅத்துடனும் மிகுந்த அன்பு கொள்ளக்கூடியவராக இருந்தார்கள். எப்போதெல்லாம் ஜமாஅத்திற்கு தியாகம் செய்வதற்கான தேவை வந்ததோ அல்லது கடிதங்களை எதிர்கொள்ள நேரிட்டதோ அப்போது அன்னார் மிக தூய மனதுடன் உதவி செய்து வந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இந்தோநேஷியா சென்றிருந்தார்கள். அப்போது இவருடைய வீட்டிலேயே தங்கி இருந்தார்கள். அரசாங்க ஊழியர் என்ற அடிப்படையில் பணி செய்தபோது தான் அஹ்மதி என்பதை மர்ஹூம் ஒருபோதும் மறைத்ததில்லை. பிற்காலத்திலும் கூட மறைத்ததில்லை. உள்ளபடியே கூறுவதாக இருந்தால் எதிர்ப்பு என்பது பிற்காலத்தில் மிக அதிகமாக துவங்கி இருந்தது. ஆனால் ஒருபோதும் தான் அஹ்மதி என்பதை அன்னார் மறைக்கவில்லை. தமது நண்பர்களுக்கு தப்லீக் செய்வதில் சுறுசுறுப்பானவராக இருந்தார்கள். ஒரு பிரபலமான அஹ்மதி நபர் என்ற முறையில் அவர் அறியப்பட்டு வந்தார்.

ஒரு முறை ஒரு மின்சார கம்பெனியின் CAO, அணைக்கட்டிலுள்ள தண்ணீர் குறைந்து வருகிறது. சிறிது காலமாகவே இதே நிலை தான் இருந்து வருகிறது. எனவே மின்சாரத்தை நிறுத்த நேரிடும் என்று அமைச்சரிடம் கூறினார். அப்போது மினிஸ்டர் சாஹிபிற்கு மர்ஹூமின் துஆக்களின் மீது சிறிது நம்பிக்கை இருந்தது. எனவே கய்யூம் சாஹிபிடம் செல்லுங்கள் என்று கூறினார். அந்த நபர் கய்யூம் சாஹிபிடம் வந்தார். மேலும் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார். நீங்கள் என்னிடமிருந்து உதவி பெற வேண்டுமென்றால் பின்னர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அதாவது எங்களது இமாமிற்கு கடிதம் எழுதுங்கள். இவ்வாறு ஆகிவிட வேண்டும் என்று தாங்கள் துஆ செய்யுமாறு அன்னார் கடிதம் எழுதினார். செவ்வாய்கிழமையன்று இந்த கடிதம் கொடுக்கப்பட்டது. அடுத்த நாளிலிருந்து தொடர் மழை பொழிந்தது. மேலும் அணைக்கட்டு நிரம்பியது.

அன்னார் ஜமாஅத்திற்கு ஆற்றிய தொண்டுகள் இவ்வாறாகும். பாரூங் என்ற இடத்தில் காம்பிளக்ஸ் கட்டுமானப் பணியில் பல தடைகளை எதிர்கொள்ள நேரிட்டது. அப்போது மஹ்மூத் சீமா சாஹிப் தப்லீக் துறை தலைவராக இருந்தார்கள். இறுதியில் அவர்கள் குறிப்பிட்ட போது அவர்கள் கூறினார்கள்: கவலைப்பட வேண்டாம். பொருளாதார விஷயத்தில் எந்தத் தடையும் இல்லை. பணத்திற்கான குறை இருந்தது. நான் முழு செலவையும் செலுத்தி விடுகின்றேன் என்று அன்னார் கூறி முழுப் பணத்தையும் கொடுத்து விட்டார்கள். மேலும் இரண்டு ஆண்டுகளில் ஒரு மாபெரும் பள்ளிவாசல் அங்கு உருவாகி விட்டது. தலைமையக விருந்தினர் இல்லம் மற்றும் முபல்லிக் இருப்பிடத்தின் கட்டுமானத்தின் பெரும்பாலான பணிகளான செலவுகளை அன்னார் வழங்கினார்கள். நான்கு கோட்டர்ஸ்களில் நூறு சதவிகித கட்டுமான செலவுகளை மர்ஹூம் மேற்கொண்டார்கள். MTA Indonesia வின் ஆரம்பகால நாட்களில் அநேகமாக முழு செலவுகளையும் மர்ஹூம் மற்றும் அன்னாரின் மனைவி சார்பாகவே செய்யப்பட்டது. மேற்கு ஜகார்தாவில் அமைந்துள்ள ஸ்டுடியோவிற்காக அன்னாரின் வீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஊழியர்களின் அலோவன்ஸ் போன் செலவுகள் மர்ஹூமின் சார்பாகவே அமைந்திருந்தது. இந்தோநேஷியாவில் ஹோமியோபதியின் துவக்க நாட்களில் ஆரம்ப கட்டுமான செலவுகளையும் மர்ஹூம் சார்பாக வழங்கப்பட்டது. மருந்துகள் முதல் கிளீனிக்கின் இடம் வரை அனைத்து செலவுகளையும் மர்ஹூமின் குடும்பம் ஏற்றுக் கொண்டது. வாஹித் சீனியர் High School ஆரம்பகால கட்டுமான பணியின் செலவுகளும் மர்ஹூமின் குடும்பத்தின் அன்பளிப்பாக இருந்தது. இதில் பெரும்பாலான பங்கு மர்ஹூமுடையதாகவே இருந்தது. காதியானில் இந்தோநேஷியா விருந்தினர் இல்லம் மற்றும் புதிதாக கட்டப்பட்டு வரும் சிராஜே அய்யூப் திட்டங்களுக்கு அன்னார் மாபெரும் பொருளாதார தியாகத்தைச் செய்துள்ளார்கள். மர்ஹூம் தலைமையகத்தை சுற்றிலும் ஏராளமான இடத்தை வாங்கியுள்ளார்கள். பின்னர் அதனை ஜமாஅத்திற்காக கொடுத்து விட்டார்கள். மஃஸூம் அஹ்மத் சாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோநேஷியாவின் Principal எழுதுகின்றார்கள்: சில முறை கூட்டம் நடைபெற்றபோது செயற்குழு கூட்டத்தில் மிக நீண்ட விவாதம் நடைபெற்று வந்தது. ஆனால் அமீர் சாஹிப் அன்னாரின் சிறிய சகோதரராகவும் இருந்தார்கள். இனி இந்த விவகாரத்தை விட்டு விடுங்கள் என்று அவர் கூறினால் உடனடியாக மௌனமாகி விடுவார்கள். மேலும் தனது புதிய கருத்தையும் எடுத்து வைத்து வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு பெனின் நாட்டைச் சேர்ந்த டவோடா ரஸாக்கி யூனுஸ் சாஹிப் அவர்களுடையதாகும். ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று 74 வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூம் பெனின் நாட்டின் ஆரம்பகால அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள். தமது வீட்டில் அன்னார் மட்டுமே அஹ்மதியாக இருந்தார்கள். பெனின் நாட்டின் முதன் முதல் அஹ்மதியாகவும், தனது சகோதரராகவும் இருந்த திக்ருல்லாஹ் தாவூத் சாஹிப் மூலமாக மர்ஹூம் 1967 இல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். அன்னாரின் மனைவி பிள்ளைகள் அஹ்மதிகள் கிடையாது. அல்லாஹ் அவர்களுக்கும் நற்பேறு வழங்குவானாக.

அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் மியான் கமர் அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்: மரணமடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை என்னிடம் கூறினார்கள். எனது மூத்த சகோதரர் திக்ருல்லாஹ் தாவூத் அவர்கள் நைஜீரியாவில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட தகவல் கிடைத்தது. அத்துடன் அஹ்மதிய்யத்தை குறித்து மக்கள் வித விதமாக பேசி வந்ததை கேட்டபோது நான் அன்னாரை சந்திப்பதற்காக சென்றேன். நான் அன்னாரிடத்தில் அலைஸல்லாஹ் மோதிரம் அணிந்திருப்பதைக் கண்டேன். இது என்ன மோதிரத்தை நீங்கள் அணிந்துள்ளீர்கள்? என்று நான் எனது மூத்த சகோதரரிடம் உடனடியாக கேட்டேன். உங்களது மார்க்கத்தில் இதற்கு என்ன அந்தஸ்து? என்று கேட்டேன். அப்போது அன்னார் இதில் திருக்குர்ஆன் வசனம் எழுதப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அல்லாஹ் தனது அடியானுக்கு போதுமானவன் இல்லையா? என்பது அதன் பொருளாகும் என்றும் கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எங்களுக்கு இந்த போதனையையே வழங்கியுள்ளார்கள்.

பின்னர் கூறுகின்றார்கள்: இஸ்லாத்திலிருந்து ஏதும் வேறுபட்டதா அஹ்மதிய்யத்? என்று நான் எனது அண்ணனிடம் கேட்டேன். அதற்கு

*(தொடர்ச்சி 16 வது பக்கம்...)*

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 செப்டம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **17 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தின் சம்பவங்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. இன்று யர்மூக் போர் தொடர்பாக எடுத்துரைப்பேன். யர்மூக் போர் நடைபெற்ற தேதி தொடர்பாக சில அறிவிப்புகளில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. இந்தப் போர் ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் நடைபெற்றதாக ஓர் அறிவிப்பில் உள்ளது. சிலரைப் பொறுத்தவரை இது ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டில் டமாஸ்கஸ் வெற்றிக்கு முன்பாக நடைபெற்றதாக கருதப்படுகின்றது. ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முதன் முதலில் யர்மூக் போர் தொடர்பாகவே வெற்றியின் நற்செய்தி கிடைத்தது என்று வந்துள்ளது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்து 20 நாட்கள் கழிந்திருந்தன. சிலரைப் பொறுத்தவரை டமாஸ்கஸ் வெற்றியின் நற்செய்தி முதன் முதலில் கிடைத்திருந்தது.

(தாரீகே திமஷ்க் அல் கபீர் லிஇப்னி அஸாகீர் தொகுதி 2 பக்கம் 141–143)

எவ்வாறிருப்பினும் முதலில் நிகழ்ந்த டமாஸ்கஸ் வெற்றியின் நற்செய்தி குறித்த விஷயமே மிகவும் சரியானதாக தோன்றுகிறது. அந்த அறிவிப்பே சரியானதாகும். சாட்சியங்கள் கூறுகின்ற விஷயங்கள் என்னவென்றால், யர்மூக் போர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்திலேயே நடைபெற்றது. ரோமானியர்கள் தோல்வியுற்று டமாஸ்கஸ் மற்றும் ஹிம்ஸிலிருந்து வெளியேறி இருந்தார்கள். பின்னர் அவர்கள் அன்தாகியாவை சென்றடைந்தார்கள். அன்தாகியா என்பது சிரியாவின் எல்லைப் புறத்திலுள்ள நகரமாகும். ரோமானியர்கள் ஹர்குலிடம் சென்று முறையிட்டனர். அதாவது அரபிகள் முழு சிரியாவையும் அழித்து விட்டனர். ஹர்குல், அவர்களில் சில புத்திசாலியான மற்றும் கண்ணியத்திற்குரிய நபர்களை அவையில் அழைத்தான். மேலும் அரபிகள் உங்களை விட வலிமை வாய்ந்தவர்களாகவும், கூட்டம் மற்றும் பொருட்களில் குறைவுடையவர்களாகவும் உள்ளனர். அவ்வாறிருக்க நீங்கள் அவர்களை எதிர்த்து ஏன் போரிடுவதில்லை? ஏன் அவர்களை எதிர்த்து போரில் நிலைபெறுவதில்லை? என்று கூறினான். அப்போது அனைவரும் வெட்கத்தால் தலைகுனிந்து நின்றனர். எவரும் பதிலளிக்கவில்லை. ஆனால் ஓர் அனுபவம் வாய்ந்த முதியவர் இவ்வாறு கூறினார். அரபிகளின் ஒழுக்கம் நம்மை விட சிறந்தாக உள்ளது.

அவர்கள் இரவில் இறைவணக்கம் செய்கின்றனர். பகலில் நோன்பு வைக்கின்றனர். எவர் மீதும் அநீதி இழைப்பதில்லை. தங்களுக்குள் ஒருவர் மற்றவரை சரிசமமாக சந்திக்கின்றனர். நமது நிலை என்னவென்றால், மது அருந்துகின்றோம். விபச்சாரம் செய்கின்றோம். உடன்படிக்கையை பேணுவதில்லை. மற்றவர்கள் மீது அநீதி இழைக்கின்றோம். எனவே இதன் விளைவாக அவர்களின் (முஸ்லிம்களின்) பணிகளில் உத்வேகம் உள்ளது. உறுதிப்பாடும் உள்ளது. ஆனால் நமது பணிகள் அந்த தைரியம் மற்றும் உறுதிப்பாட்டிலிருந்து வெறுமையாக உள்ளது.

கைஸர் உண்மையில் சிரியாவை விட்டு வெளியேறுவதற்கு எண்ணம் கொண்டு விட்டார். ஆனால் ஒவ்வொரு நகரம் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டம் கூட்டமாக முறையிடக்கூடிய கிறிஸ்துவர்கள் வந்த வண்ணம் இருந்தனர். கைஸருக்கு கடுமையான தன்மானம் வந்தது. மிகவும் உத்வேகத்துடன் தமது அரசாட்சியின் முழுமையான ஆற்றலை அரபிகளுக்கு எதிரில் செலவிட வேண்டும் என்று தயாரானான்.

ரோம், கஸ்தன்தீனியா, ஆர்மீனியா தீவு போன்ற எல்லா இடங்களிலும் அதிகாரிகளை அனுப்பினான். குறிப்பிட்ட தேதிக்குள் அனைத்து படைகளும் அன்தாகியாவில் ஆஜராகி விட வேண்டும் என்ற கட்டளையை அனுப்பினான். மேலும் எந்த அளவிற்கு நபர்கள் கிடைப்பார்களோ அவர்களை ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கும்படி அனைத்து மாவட்டங்களின் அதிகாரிகளுக்கும் கடிதம் அனுப்பினான். படைகள் வந்தடைந்ததும் படைகளின் ஒரு பெரும் புயல் உருவெடுத்தது. அன்தாகியாவில் நாலாபுறமும் பார்வைகளை செலுத்திய திசையெல்லாம் படையினரே குவிக்கப்பட்டிருந்தனர். எண்ணற்ற படை இருந்தது.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் வெற்றி பெற்ற இடங்களில் அங்கிருந்த அமீர்மார்கள் மற்றும் தலைவர்கள் அன்னாரின் நீதி, நேர்மையை மிகவும் பாராட்டத் தொடங்கினர். எதிர்ப்புக்கு மத்தியிலும் மார்க்க எதிர்ப்புக்கு மத்தியிலும் அவர்கள் சுயமே தன்புறமிருந்து எதிரியின் செய்தியை கொண்டு வரக்கூடிய உளவாளிகளை நியமித்திருந்தனர். எனவே அவர்களின் மூலமாக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு அனைத்து சம்பவங்களைக் குறித்த தகவலும் கிடைத்தது. அன்னார் அனைத்து அதிகாரிகளையும் ஒன்றுகூட்டினார்கள். ஓரிடத்தில் நின்றுகொண்டு மிக தாக்கமிகு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

அதன் சுருக்கம் இதுவாக இருந்தது: முஸ்லிம்களே! இறைவன் உங்களை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்கின்றான். நீங்கள் இந்த ஆய்வில் வெற்றி பெறுங்கள். இறைவன் அதற்கு பகரமாக உங்களை எப்போதும் வெற்றியாளராகவும், உதவி செய்பவராகஸவும் உங்களை ஆக்கியுள்ளான். எப்போதும் வெற்றி கிடைத்துள்ளது. தற்போது உங்களின் எதிரி பூமி அதிர்ந்துவிடும் அளவிற்கு போர் தளவாடங்களுடன் உங்களை எதிர்ப்பதற்காக வந்துள்ளான். இப்போது என்ன ஆலோசனை? என்று கூறுங்கள். அபூசுஃப்யானின் மகனும், அமீர் முஆவியாவின் சகோதரருமான யஸீத் அவர்கள் எழுந்து நின்று இவ்வாறு கூறினார்கள்: எனது கருத்து என்னவென்றால், பெண்கள் மற்றும் குழந்தைகளை நகரத்தில் தங்க அனுமதியுங்கள். மேலும் நாம் சுயமே நகரத்திற்கு வெளியே சென்று படையை அணிவகுப்போம். மேலும் அத்துடன் டமாஸ்கஸ் மற்றும் பாலஸ்தீனத்திலிருந்து விரைவாக உதவியை அனுப்பும்படி காலித் மற்றும் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்கு கடிதம் அனுப்புங்கள். டமாஸ்கஸ் வெற்றி முதலில் நிகழ்ந்தது என்பது இந்த சம்பவத்திலிருந்தும் நிரூபணமாகின்றது.

ஷுர்ஹபீல் பின் ஹஸனா இவ்வாறு கூறினார்: இந்த சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நபரும் சுதந்திரமாக கருத்தை தெரிவிக்க வேண்டும். யஸீத் அவர்கள் வழங்கிய கருத்து சந்தேகத்திற்கிடமின்றி நல்லெண்ணத்தின் காரணமாக வழங்கப்பட்டதாகும். ஆனால் நான் அதனை எதிர்க்கின்றேன். நகரவாசிகள் அனைவரும் கிறிஸ்தவர்கள் ஆவர். அவர்கள் பகைமையின் காரணமாக நமது குடும்பத்தினரை பிடித்து கைஸரிடம் ஒப்படைப்பதோ அல்லது அவர்கள் சுயமே கொன்று விடுவதோ சாத்தியமாகும். மேலும் சுயமே இவர்கள் அவர்களுக்குகெதிராக நின்றுவிடக் கூடும். அதற்கு ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இதற்குரிய திட்டம் என்னவென்றால், நாம் கிறிஸ்தவர்களை நகரத்திலிருந்து வெளியேற்றி விட்டால் நமது மனைவி மக்கள் பாதுகாப்பாகி விடுவார்கள் என்று கூறினார்கள்.

ஷுர்ஹபீல் எழுந்து நின்று இவ்வாறு கூறினார்: அமீரே! உமக்கு ஒருபோதும் இந்த உரிமை இல்லை. நாம் அவர்களை நகரத்ததில் மன நிறைவுடன் இருக்க அனுமதிப்போம் என்ற நிபந்தனையின் கீழ் நாம் அந்த கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளோம். அவ்வாறிருக்க உடன்படிக்கையை எப்படி முறிக்க முடியும். ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டு விட்டது. அவர்களை நகரத்தை விட்டு வெளியேற்றி எவ்வாறு அந்த உடன்படிக்கையை முறிக்க முடியும்? ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் தனது தவறை ஒப்புக் கொண்டார்கள். எனினும் இறுதியில் என்ன செய்ய வேண்டும் என்று இந்த விவாதத்தில் முடிவெடுக்கப்படவில்லை.

பொது மக்கள் இவ்வாறு ஆலோசனை கூறினர்: ஹிம்ஸில் தங்கிக்கொண்டு இராணுவ உதவிக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவ்வளவு நேரம் எங்கே உள்ளது? இறுதியில் ஹிம்ஸை விட்டு விட்டு டமாஸ்கஸ் புறப்பட வேண்டும். அங்கு காலித் இருக்கின்றார். மேலும் அரபிகளின் எல்லை அருகில் உள்ளது என்ற ஆலோசனையே நிலைபெற்றது. அப்போது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கருவூலத்தின் அதிகாரியாக இருந்த ஹபீப் பின் முஸல்லமாவை அழைத்தார்கள். மேலும் கிறிஸ்தவர்களிடமிருந்து ஜிஸ்யா அல்லது கராஜ் பெறப்பட்டதை அதாவது வரியாக வசூலிக்கப்பட்டதை திருப்பிக் கொடுக்கும்படி கூறினார்கள். தற்போது நமது நிலை எவ்வளவு அபாயகரமானதாக உள்ளதென்றால் நம்மால் அவர்களின் பாதுகாப்பிற்கான பொறுப்பை சுமக்க இயலாது. இந்த வரி ஏற்பாடுகள் அவர்களின் பாதுகாப்பு பணிகளுக்காக இருக்கும் என்பதால் தான் இருந்தன. ஆனால்

அதனை நம்மால் செய்ய முடியவில்லை. எனவே அவர்களிடமிருந்து என்னவெல்லாம் வசூலானதோ அனைத்தையும் அவர்களிடம் திருப்பி ஒப்படையுங்கள். மேலும் உங்களுடன் எங்களுக்கு இருந்த தொடர்பு அது இப்போதும் உள்ளது. ஆனால் இந்த நேரத்தில் எங்களால் உங்களின் பாதுகாப்பிற்குரிய பொறுப்பை நிறைவேற்ற முடியாது. எனவே பாதுகாப்பிற்குரிய வரியாக நீங்கள் செலுத்திய ஜிஸ்யா வரி உங்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படுகிறது என்று அவர்களிடம் கூறிவிடுங்கள்.

எனவே பல லட்சம் ரூபாய் வசூலாகி இருந்தது. அனைத்தும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்துவர்கள் மீது இந்த சம்பவத்தின் தாக்கம் எந்த அளவுக்கு ஏற்பட்டதென்றால் அவர்கள் அழுது கொண்டே சென்றார்கள். இறைவன் உங்களை திருப்பிக் கொண்டு வரட்டும் என்று உத்வேகத்துடன் கூறிக்கொண்டு சென்றார்கள். இதை விட அதிகமாக யூதர்களின் மீது தாக்கம் ஏற்பட்டது. தவ்ராத்தின் மீது ஆணையாக! நாங்கள் உயிருடன் இருக்கும் வரை கைஸரால் ஹிம்ஸை கைப்பற்ற முடியாது என்று அவர்கள் கூறினர். இதனைக் கூறிவிட்டு நகரத்தின் அடைக்கலம் பெறுகின்ற வாயிலை அடைத்து விட்டனர். மேலும் எல்லா இடங்களிலும் பாதுகாவலரை நிறுத்தினார்கள். அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹிமஸ் வாசிகளுடன் மட்டும் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. மாறாக, எந்த அளவிற்கு மாவட்டங்களை வெற்றி கொண்டிருந்தார்களோ அங்கு எல்லா இடங்களிலும் இவ்வாறு கடிதம் எழுதினார்கள். ஜிஸ்யா வரியாக எவ்வளவு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளதோ அதனை திருப்பிச் செலுத்துமாறு கூறினார்கள்.

சுருக்கமாக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் டமாஸ்கஸிற்கு புறப்பட்டார்கள். மேலும் இந்த அனைத்து நிலவரங்களையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தெரியப்படுத்தினார்கள். முஸ்லிம்கள் ரோமானியர்களின் அச்சத்தால் ஹிமஸ் வந்து விட்டார்கள் என்ற செய்தியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செவியுற்று மிகவும் வருந்தினார்கள். ஆனால் முழு படையும், படையின் அதிகாரிகளும் இதே முடிவை தான் எடுத்திருந்தார்கள் என்பது அன்னாருக்கு தெரிந்தவுடன் உடனடியாக ஆறுதல் அடைந்தார்கள். மேலும் இறைவன் ஏதோவொரு நன்மைக்காக அனைத்து முஸ்லிம்களையும் இந்த கருத்தில் ஒன்றுகூட்டி விட்டான் என்று கூறினார்கள்.

முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு உங்களால் பாதுகாப்பு அளிக்க முடியாதென்றால் அவர்களின் அனைத்தையும் அதாவது ஜிஸ்யாவாக நீங்கள் பெற்ற அனைத்தையும் திருப்பி ஒப்படையுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தான் கூறியிருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு பதில் அனுப்பினார்கள்: நான் ஸயீத் பின் ஆமிர் அவர்களை உதவிக்காக அனுப்புகின்றேன். எனினும் வெற்றி மற்றும் தோல்வி படையின் கூடுதல் குறைவால் கிடைப்பதில்லை. அபூஉபைதா (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் சென்றடைந்து அனைத்து அதிகாரிகளையும் ஒன்றுகூட்டினார்கள். அவர்களிடம் ஆலோசனை செய்தார்கள். யஸீத் பின் அபூசுஃப்யான் ஷுர்ஹபீல் பின் ஹஸனா, முஆஸ் பின் ஜபல் ஆகிய அனைவரும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். இதற்கிடையில் அம்ர் பின் ஆஸ் அவர்களின் தூதுவர் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்தடைந்தார். உர்தன் மாவட்டங்களில் பொதுவான கிளர்ச்சி பரவிவிட்டது என்ற கட்டுரையை கொண்டதாக அந்த கடிதம் அமைந்திருந்தது. மேலும் ரோமானியர்கள் வருகை பெரும் அச்சத்தை ஏற்படுத்தி விட்டது. ஹிம்ஸை விட்டு விட்டு வந்தது அச்சமற்ற நிலைக்கு காரணியாக இருந்தது என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. நாங்கள் அச்சத்திற்குள்ளாகி வெளியேறவில்லை. மாறாக எதிரி பாதுகாப்பான இடங்களிலிருந்து வெளியேறி வர வேண்டும். மேலும் பல்வேறு இடங்களில் பரவியுள்ள இஸ்லாமிய படைகள் ஒன்றுகூடி விட வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது என்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் பதில் எழுதினார்கள். மேலும் நீங்கள் உங்களது இடத்திலிருந்து விலக வேண்டாம். அங்கேயே இருங்கள். நாங்கள் அங்கு வந்து உங்களை சந்திக்கின்றோம் என்றும் எழுதியிருந்தார்கள்.

இரண்டாவது நாள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் டமாஸ்கஸிலிருந்து புறப்பட்டு விட்டார்கள். உர்தன் எல்லைகளில் யர்மூக்கை சென்றடைந்து தங்கினார்கள். யர்மூக் சிரியாவின் சுற்றுவட்டாரங்களில் அமைந்திருந்த ஒரு தாழ்வான பள்ளத்தாக்கு ஆகும். அங்கு உர்தன் நதி ஓடிக் கொண்டிருந்தது. அம்ர் பின் ஆஸ் அவர்களும் அங்கு வந்து சந்தித்தார்கள். அரபிகளின் எல்லை மற்ற அனைத்து இடங்களைக் காட்டிலும் இங்கிருந்து அருகில் இருந்தது. மேலும் பின்புறத்தில் அரபின் எல்லை வரை திறந்தவெளி மைதானம் இருந்தது. தேவைக்கேற்ப எங்கு வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் பின்னால் விலகிக் கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்திருந்தது. இது போரின் தேவையின் அடிப்படையில் மிக அவசியமானதாக இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஸயீத் பின் ஆமிர் அவர்களுடன் அனுப்பி வைத்திருந்த படை இன்னும் அங்கு வந்தடையவில்லை. அங்கு ரோமானியர்களின் வருகையும், அவர்களின் போர் தளவாடங்களின் நிலைமைகளையும் செவியுற்று முஸ்லிம்கள் பதற்றமடைந்து கொண்டே சென்றனர். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் மற்றொரு தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார்கள். மேலும் ரோமானியர்கள் வபர் கடலிலிருந்து வந்தடைந்துள்ளனர். படை எந்த இடத்தையெல்லாம் கடந்து செல்கின்றதோ அங்கு துறவிகளும் மேலும் தனிமையிலிருந்து வெளியில் வந்து ஒரு அடி கூட எடுத்து வைக்காத நபர்களும் வெளியேறி படையுடன் இணைந்து கொண்டே சென்றனர். இது அவர்களின் உத்வேகத்தின் நிலையாகும். இந்த கடிதம் கிடைத்தவுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரை ஒன்றுகூட்டினார்கள். மேலும் கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். அனைத்து சஹாபிகளும் அழுதார்கள். மேலும் மிகவும் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! இறைவனுக்காக தாங்கள் எங்களுக்கு அனுமதி தாருங்கள். நாங்கள் எங்களது சகோதரர்களுக்காக உயிரை அர்ப்பணம் செய்ய வேண்டும். துரதிஷ்டவசமாக அவர்களுக்கு சிறிதளவு துன்பம் ஏற்பட்டாலும் பின்னர் நாங்கள் உயிர் வாழ்வது பொருளற்றதாகும். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சகோதரர்களின் உணர்வு அதிகரித்துக் கொண்டே சென்றது.

எந்த அளவுக்கென்றால் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்: அமீருல் மூமினீன்! தாங்கள் சுயமே படைத்தளபதியாக ஆகி விடுங்கள். எங்களை தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். ஆனால் மற்ற சஹாபிகள் இந்த கருத்தில் மாறுக் கருத்து கொண்டிருந்தனர். மேலும் இராணுவ உதவிகள் அனுப்பப்பட வேண்டும் என்ற கருத்தே நிலைபெற்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தூதுவரிடம் இவ்வாறு கேட்டார்கள்: எதிரி எங்கு வரை வந்துள்ளான்? அதற்கு அவர் யர்மூக்கிலிருந்து 3, 4 படித்தரங்களின் தொலைவே எஞ்சியுள்ளான் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் துன்பத்திற்குள்ளானார்கள். வருந்துகிறேன். இப்போது என்ன செய்ய முடியும்? என்று கூறினார்கள். இவ்வளவு குறுகிய காலத்தில் உதவி எவ்வாறு அவர்களுக்கு கிடைக்க முடியும்? அபூஉபைதா அவர்களின் பெயரில் மிகவும் தாக்கமிகு சொற்களில் ஒரு கடிதத்தை எழுதினார்கள். மேலும் நீங்கள் சுயமே சென்று ஒவ்வொரு படை வரிசையிலும் இந்த கடிதத்தை வாசித்துக் காட்ட வேண்டும். மேலும் உமர் உங்கள் அனைவருக்கும் ஸலாம் கூறுகின்றார் என்று வாய்மொழியாக கூறுங்கள் என்றும் தூதுவரிடம் கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய மக்களே! அச்சமின்று போரிடுங்கள். மேலும் உங்களின் எதிரிகளின் மீது சிங்கங்களைப் போன்று பாய்ந்து விடுங்கள். வாள்களால் அவர்களின் தலைகளை சீவி விடுங்கள். அவர்கள் உங்களைப் பொறுத்தவரை எறும்புகளை விட இழிவானவர்களாக இருக்கட்டும். அவர்களின் பெரும்பான்மை உங்களை அச்சத்திற்குள்ளாக்க வேண்டாம். உங்களை இதுவரை அவர்கள் அடையாத நிலையில் அவர்களைக்கண்டு அச்சமடைய வேண்டாம். அவர்களின் காரணமாக கவலைக்குள்ளாக வேண்டாம். எந்த நாள் தூதுவர் அபூஉபைதா அவர்களிடம் வந்தாரோ அதே நாளன்று ஸயீத் பின் ஆமிர் அவர்களும் ஆயிரம் நபர்களுடன் வந்தடைந்து விட்டார்கள். முஸ்லிம்களுக்கு மாபெரும் வலிமை கிடைத்தது. அவர்கள் மிகவும் உறுதிப்பாட்டுடன் போருக்கான தயாரிப்புகளை செய்யத் தொடங்கினார்கள்.

மாபெரும் அந்தஸ்தைப் பெற்றிருந்த மஆஸ் பின் ஜபல் (ரலி) மைமனா படைக்கு நியமிக்கப்பட்டார்கள். குபாஸ் பின் அஷீம் அவர்களை மைஸராவிற்கும் ஹாஷிம் பின் உத்பாவை நடைபயண படைக்கு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்கள். தமது படையை நான்கு பிரிவாக பிரித்திருந்தார்கள். ஒரு பிரிவை தம்முடனும், எஞ்சிய பிரிவுகளுக்கு கைஸ் பின் உபைரா, மைஸரா பின் மஸ்ரூக், அம்ர் பின் துஃபைல் ஆகியோரை நியமித்தார்கள். இந்த மூன்று போர் வீரர்கள் முழு அரேபியாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் மிகப்பெரும் வீரர்கள் என்று கூறப்பட்டார்கள். இதன் காரணமாக ஃபாரிஸுல் அரப் என்று அழைக்கப்பட்டார்கள். ரோமானியர்களும் பெரும் போர் தளவாடங்களுடன் வந்திருந்தார்கள். அவர்களின் கூட்டம் ஒரு லட்சத்தையும் விட கூடுதலாக இருந்தது. 24 வரிசைகள் இருந்தன. அவர்களுக்கு முன்னால் அவர்களின் மார்க்க தலைவர்கள் கைகளில் சிலுவைகளை உத்வேகத்துடன் ஏந்திக் கொண்டு முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். படைகள் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன. அப்போது ஒரு பக்கம் பித்ரீக் படையை கிழித்துக் கொண்டு வெளியேறினான். நான் தனியாக போரிட விரும்புகின்றேன் என்று அவர் கூறினான்.

பத்ரீக் கிறிஸ்துவர்களின் மார்க்க தலைவர் என்று அழைக்கப்படுகின்றான். மைஸரா பின் மஸ்ரூக் குதிரையை ஓட்டினார். ஆனால் எதிரி மிகவும் வீரராகவும், இளைஞராகவும் இருந்தார். காலித் அவரை தடுத்து நிறுத்தினார். கைஸ் பின் ஹுபைராவை நோக்கி பார்த்தார்கள். அவர் கவிதைகளை படித்துக் கொண்டே முன்னேறினார். கைஸ் அவர்கள் எந்த அளவிற்கு வேகத்துடன் தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் பித்ரீக் ஆயுதங்களை சரிவர பிடிக்கக் கூட முடியவில்லை. மேலும் அவர்களின் தாக்குதல் பயனளித்தன. வாள்

தலைமீது பட்டது. மேலும் அந்த வாளானது வெட்டப்பட்ட கழுத்தில் உள்ளே இறங்கி விட்டது. பத்ரீக் தடுமாறி குதிரையிலிருந்து கீழே விழுந்தான். அத்துடன் முஸ்லிம்கள் தக்பீர் முழக்கத்தை உயர்த்தினர். காலித் அவர்கள் சகுணம் நல்லதாக இருக்கிறது என்று கூறினார்கள். இனி இறைவன் விரும்பினால் வெற்றி நமதாகும் என்று கூறினார்கள்.

கிறிஸ்துவர்கள் காலித் அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த படை அதிகாரிகளுக்கு எதிராக தனித்தனியாக தங்களது படைகளை நிறுத்தினர். ஆயினும் அனைவரும் தோல்வியுற்றனர். அந்த நாள் எந்த அளவிற்கு நிலைமை வந்தடைந்ததென்றால் போர் ஒத்தி வைக்கப்பட்டது. நாம் தோல்வியுறுகின்றோம் என்பதைப் ரோமானியர்கள் பார்த்தபோது இரவில் ரோமானியர்களின் படைத்தளபதி பாபான் தலைவர்களை ஒன்றுகூட்டினான். அரேபியர்களுக்கு சிரியாவின் செல்வத்தின் சுவை கிடைத்திருந்தது. எனவே செல்வம் மற்றும் நகைகளில் ஆசையை ஊட்டி அவர்களை இங்கிருந்து அனுப்பி விடுவது போரை விட சிறந்ததாகும் என்று கூறினான். அனைவரும் இந்தக் கருத்தில் ஒன்றுபட்டனர். இரண்டாவது நாள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் தூதுவரை அனுப்பினார்கள். கண்ணியமிக்க ஒரு அதிகாரியை எங்களிடம் அனுப்பி வையுங்கள். நாங்கள் அவர்களுடன் சமாதானம் பற்றி உரையாட விரும்புகின்றோம் என்று கூறினார். அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை தேர்ந்தெடுத்தார்கள். தூதுவர் கொண்டு வந்த தூதுச் செய்தியின் பெயர் ஜார்ஜ் என்று கூறப்படுகிறது. மேலும் வரலாற்று ஆய்வாளர்கள் ஜார்ஜ் என்று எழுதுதியுள்ளனர். ஆனால் அரேபியர்களைக் குறித்து நான் கூறுகின்றேன். அரபிப் புத்தகங்களில் அவரது பெயர் ஜுர்ஜா என்று கூறப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அவர் வந்தடைந்தபோது மாலை நேரமாக இருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு மஃரிப் தொழுகை தொடங்கியது. முஸ்லிம்கள் மிகவும் ஆர்வத்துடனும், உத்வேகத்துடனும் தக்பீர் கூறி எழுந்து நின்றார்கள். மேலும் அர்ப்பணிப்பு உணர்வுடனும், அமைதியுடனும், கண்ணியத்துடனும், மரியாதையுடனும் அவர்கள் தொழுகையை நிறைவேற்றினார்கள். இதனையெல்லாம் தூதுவர் மிகவும் ஆச்சரியமிக்க பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். தொழுகை முடிந்த பிறகு அவர் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் சில கேள்விகளை முன் வைத்தார். அதில் ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது. நீங்கள் ஈஸா (அலை) அவர்களைக் குறித்து என்ன நம்பிக்கை கொண்டுள்ளீர்கள்? என்று கேட்டார்.

அப்போது அபூஉபைதா (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் இந்த வசனத்தை ஓதிக் காட்டினார்கள். அதாவது நினைவிற் கொள்ளுங்கள். ஈஸாவின் நிலை அல்லாஹ்வின் பார்வையில் நிச்சயமாக ஆதமின் நிலையைப் போன்றதாகும். அவரை அதாவது ஆதமை அவன் காய்ந்த மண்ணிலிருந்து படைத்தான். பின்னர் அவரைக் குறித்து நீர் உருவாகுக என்று அவன் கூறியதும் அவர் உருவாகத் தொடங்கினார். (3:60)

வேதத்தை உடையவர்களே! நீங்கள் உங்களது மார்க்க விவகாரங்களில் வரம்பு மீறாதீர்கள். அல்லாஹ்வைக் குறித்து உண்மையை தவிர்த்து வேறு எதனையும் பேசாதீர்கள். மஸீஹ் ஈஸப்னு மர்யம் அல்லாஹ்வின் ஒரு தூதர் மட்டுமே ஆவார். இறைவனின் ஒரு நற்செய்தி இருந்தது. அது மர்யம் அவர்களுக்கு இறக்கப்பட்டது. மேலும் அவன் புறமிருந்து ஒரு கருணை இருந்தது. எனவே நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனது தூதர்கள் அனைவரின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். இறைவன் மூன்று ஆவான் என்று கூறாதீர்கள். இந்த விஷயத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு சிறந்ததாகும். அல்லாஹ் மட்டுமே இறைவன் ஆவான். அவனுக்கு பிள்ளைகள் பிறக்கும் என்ற விஷயத்திலிருந்து அவன் தூயவன் ஆவான். வானம் மற்றும் பூமியிலுள்ளவை எல்லாம் அவனுக்கே உரியதாகும். அல்லாஹ்வின் பாதுகாப்பிற்குப் பிறகு எவருடைய பாதுகாப்பிற்கும் தேவையில்லை. மஸீஹ் ஒருபோதும் இந்த விஷயத்தை தீயதாக கருதியதில்லை. அதாவது அவர் அல்லாஹ்வின் ஓர் அடியாரும், உதவியாளரும் ஆவார். மேலும் இறைவனின் நெருங்கிய வானவர்களும் கூட அதனை தீயதாக கருதியதில்லை. (4:172, 173)

எவ்வாறிருப்பினும் மொழிபெயர்ப்பு செய்யக்கூடியவர்கள் இந்த வசனங்களை மொழிபெயர்த்தார்கள். அப்போது ஜார்ஜ் என்ற பெயர் கொண்ட தூதுவர் தன்னையும் அறியாமல் உரத்த குரலில் நான் சாட்சி கூறுகின்றேன். ஈஸாவின் நற்பண்புகள் இதுவே ஆகும். மேலும் உங்களது தூதர் உண்மையாளர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு கூறிவிட்டு அவர் ஏகத்துவ கலிமாவை படித்து விட்டார். மேலும் முஸ்லிமாகி விட்டார். மேலும் அவர் தமது சமுதாயத்திடம் திரும்பிச் செல்லவில்லை. திரும்பிச் செல்வதை அவர் விரும்பவும் இல்லை. ஆனால் இது ரோமானியர்களுடன் உடன்படிக்கைக்கு மாற்றமான செயலாக ஆகிவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் அவரை ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் நிர்ப்பந்தித்தார்கள். மேலும் நாளை இங்கிருந்து நமது தூதுவர் செல்வார். அவருடன் திரும்பிச் செல்லுங்கள். தற்போது நீங்கள் அங்கு செல்லுங்கள் என்று கூறினார்கள்.

இரண்டாவது நாள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ரோமானியர்களின் படைத்தளத்திற்கு சென்றார்கள். ரோமானியர்கள் தங்களது பெருமையை காட்டுவதற்காக ஏற்கனவே ஓர் ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அதாவது வழியின் இரண்டு புறங்களிலும் தொலை தூரம் வரை சவாரிகள் அணிவகுத்து நிற்கட்டும். அவர்களின் தலை முதல் பாதம் வரை இரும்பால் மூழ்கி இருக்கட்டும். ஆனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அதனை பொருட்படுத்தாமலும், ஏளனமான பார்வையுடனும் பார்த்தார்கள். இவ்வாறு பார்த்துக் கொண்டே சென்றார்கள். ஒரு சிங்கம் ஆடுகளின் கூட்டத்தை விலக்கிக் கொண்டு செல்வத்தைப் போன்று அவர்கள் ரோமானியர்களை கடந்து சென்றார்கள்.

பாபானின் கூடாரத்திற்கு அருகில் சென்றார்கள். அவன் மிகவும் மரியாதையுடன் அன்னாரை வரவேற்றான். மேலும் அவர்களை வரவேற்று தமக்கு சமமாக அமர்த்தினான். மொழிபெயர்ப்பாளர்களுடன் உரையாடல் ஆரம்பமானது. பாபான் சிறிய அளவிலான பேச்சுவார்த்தைக்குப் பிறகு சொற்பொழிவு முறையில் தனது விஷயத்தை ஆரம்பித்தான். ஹஸ்ரத் ஈஸா அவர்களை புகழ்ந்த பிறகு கைஸரின் பெயரை நினைவூட்டினான். மேலும் மிகப்பெருமிதத்துடன் எங்களது அரசர் அனைத்து அரசர்களுக்கும் பேரரசர் ஆவார் என்று கூறினான். மொழிபெயர்ப்பாளர் தற்போது அந்த சொற்களை முழுமையாக மொழிபெயர்ப்பு கூட செய்திருக்கவில்லை. அதற்கு காலித் (ரலி) அவர்கள் பாபானை தடுத்து விட்டார்கள். மேலும் உங்களது அரசர் அவ்வாறானவராக இருக்கட்டும். ஆனால் எங்களது தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு ஒரு நொடிப்பொழுது கூட நாம் அரசர் ஆவோம் என்ற எண்ணம் வந்து விட்டால் நாங்கள் உடனடியாக அவரை அகற்றி விடுவோம்.

பாபான் மீண்டும் சொற்பொழிவை தொடங்கினான். மேலும் தனது செல்வ, செழிப்புகளை, பெருமிதங்களை எடுத்துரைத்தான். அரபுவாசிகளே! உங்களது சமுதாயத்தின் மக்கள் எங்களது நாட்டில் வந்து வசிக்கின்றனர். நாங்கள் எப்போதும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துள்ளோம். இந்த விஷயத்தை அனைத்து அரேபியர்களும் நன்றியுடன் நினைவு கூருவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால் எதிர்ப்பார்ப்புக்கு எதிராக நீங்கள் எங்களது நாட்டில் படையெடுத்து வந்துள்ளீர்கள். மேலும் எங்களை எங்களது நாட்டிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள். ஏராளமான சமுதாயங்கள் பல முறை இந்த எண்ணங்களைக் கொண்டனர். ஆனால் அவர்களால் அதில் வெற்றி பெற முடியவில்லை. தற்போது நீங்கள் யாராக உள்ளீர்கள் என்றால் உலகில் உங்களை விட அறிவீனமான சமுதாயம் வேறில்லை. காட்டுமிராண்டிகளாகவும், போர் தளவாடங்கள் இல்லாதவர்களாகவும் நீங்கள் இருந்தீர்கள். நீங்கள் எங்கள் மீது போர் தொடுத்தால் நாங்கள் அதை மன்னித்து விடுவோம் என்ற தைரியம் உங்களுக்கு உள்ளது. இன்னும் கூறப்போனால் நீங்கள் இங்கிருந்து சென்று விட்டால் ஒவ்வொரு படைத்தளபதிக்கும் பத்தாயிரம் தினார்களும், அதிகாரிகளுக்கு ஆயிரமாயிரம் தினார்களும், சாதாரண படைவீரருக்கு நூறு தினாரும் பரிசாக வழங்கப்படும்.

ஆனால் ஒரு மாபெரும் படை முஸ்லிம்ளுக்கெதிராக ஒன்றுகூடி இருந்தது. முஸ்லிம்களை அழித்து விட வேண்டும் என்பதற்காக அவர்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். ஆனால் போரை வெற்றி கொள்வது எளிதல்ல என்பதை அவர்கள் கண்டபோது அவர்கள் இந்த நிபந்தனைகளை வகுத்தார்கள்.

எவ்வாறிருப்பினும் பாபான் தனது சொற்பொழிவை முடித்த பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் இறைவனை போற்றி புகழ்ந்த பிறகு இவ்வாறு கூறினார்கள்: நிச்சயமாக சந்தேகத்திற்கிடமின்றி நீங்கள் செல்வந்தர்கள் ஆவீர்கள். ஆட்சியாளர்களும் ஆவீர்கள். நீங்கள் உங்களது அண்டை, அயலாரான அரபிகளுடன் நடந்த விதத்தையும் நாங்கள் அறிவோம். ஆனால் இதுவொன்றும் உங்களது கருணை அல்ல. மாறாக, மார்க்கத்தை பரப்புபதற்கு ஒரு திட்டமாகும். நீங்கள் உங்களது மார்க்கத்தை பரப்ப விரும்புகின்றீர்கள். அதன் தாக்கத்தின் காரணமாக அந்த அரபுகள் கிறிஸ்தவர்களாகி விட்டனர். மேலும் இன்றும் நீங்கள் எங்களுக்கெதிராக போரிட வந்திருக்கும்போது அவர்களும் உங்களுடன் இணைந்து கொண்டு எங்களுக்கெதிராக போரிட வந்துள்ளனர். நாங்கள் மிகவும் ஏழைகளாகவும், வறியவர்களாகவும், வீடற்றவர்களாகவும் இருந்தோம். எங்களது அநீதி மற்றும் அறிவீனத்தின் நிலை என்னவாக இருந்ததென்றால், எங்களில் வலிமை வாய்ந்த நபர் பலவீனமானவரை துன்புறுத்திக் கொண்டிருந்தார். கோத்திரங்கள் தங்களுக்குள் சண்டையிட்டு சண்டையிட்டு அழிந்து கொண்டே இருந்தன. ஆனால் இறைவன் எங்கள் மீது கருணை காட்டினான். ஒரு தூதரை அனுப்பினான். அவர் சுயமே எங்களது சமுதாயத்தை சார்ந்தவராக இருந்தார். அவர் எங்களில் அனைவரையும் விட மிகவும் கண்ணியத்திற்குரியவராகவும், மிகவும் தூயவராகவும், மிகவும் அருளுக்குரியவராகவும் இருந்தார். அவர் எங்களுக்கு ஏகத்துவத்தை கற்றுத் தந்தார். இறைவனுக்கு எந்த இணையும் இல்லை என்பதை எங்களுக்கு எடுத்துரைத்தார். அவனுக்கு

மனைவியும் இல்லை; பிள்ளைகளும் இல்லை. அவன் முற்றிலும் ஏகனாவான் என்பதை எங்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் நாங்கள் இந்த கொள்கைகளை முழு உலகிற்கு முன்னாலும் எடுத்து வைக்க வேண்டும் என்று எங்களுக்கு அவர் கட்டளையிட்டுள்ளார். எவர் அதனை ஏற்றுக் கொள்வாரோ அவர் முஸ்லிமும், எங்களது சகோதரரும் ஆவார். எவர் அதை ஒப்புக் கொள்ளவில்லையோ ஆயினும் ஜிஸ்யா வரி கொடுப்பதை ஒப்புக் கொள்வாரோ அவருக்கு நாங்கள் உதவியாளராகவும், பாதுகாப்பாளராகவும் இருப்போம். எவர்கள் இரண்டையும் நிராகரித்து விடுவார்களோ அவர்களுக்கு வாள் உள்ளது. எவர் ஒப்புக் கொள்ளவில்லையோ பின்னர் அவர் போரிடுவதற்கு தயாராக இருக்கட்டும். பின்னர் நாங்களும் தயாராக உள்ளோம்.

பாபான் ஜிஸ்யா வரி என்ற பெயரைக்கேட்டு பெருமூச்சு விட்டான். தமது படையை சுட்டிக்காட்டி இவர்கள் இறந்தாலும் ஜிஸ்யா வரி செலுத்த மாட்டார்கள் என்று கூறினான். நாங்கள் ஜிஸ்யா வரி கொடுக்க மாட்டோம் என்று கூறினான். சுருக்கமாக எந்த விவகாரமும் முடிவெடுக்கப்படவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எழுந்து சென்று விட்டார்கள். தற்போது இறுதி போருக்கான ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. அதன் பிறகு ரோமானியர்கள் பின்னர் ஒருபோதும் நிலைபெற முடியவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சென்றுவிட்ட பிறகு பாபான் தலைவர்களை ஒன்றுகூட்டினான். நீங்கள் கேட்டீர்களா? நீங்கள் எதுவரை அவர்களின் குடிமக்களாக ஆகிவிட மாட்டீர்களோ அதுவரை அவர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியாது என்பது அரேபியர்களின் வாதமாகும். நீங்கள் அவர்களின் அடிமையாக இருப்பதற்கு சம்மதமா? என்று கேட்டான். அனைத்து அதிகாரிகளும் நாங்கள் மரணித்து விடுவோம். ஆனால் இந்த இழிவை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்று மிகவும் உத்வேகத்துடன் கூறினர்.

காலை விடிந்தது. அப்போது ரோமானியர்கள் எந்த அளவிற்கு உத்வேகத்துடனும், போர் தளவாடங்களுடனும் வெளியேறினார்கள் என்றால் முஸ்லிம்களுக்கும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இதைப் பார்த்து விட்டு அரபின் பொதுவான சட்டங்களுக்கு எதிராக புதிய வடிவில் படையை அணிவகுத்தார்கள். ரோமானியர்கள் இந்த அளவிற்கு உத்வேகத்துடனும், போர் தளவாடங்களுடனும் புறப்பட்டுள்ளார்கள் என்பதை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கண்டபோது அரேபியர்களின் பொதுவான சட்டத்தை மாற்றினார்க்ள. அதற்கெதிராக ஒரு புதிய வழிமுறையுடன் படையை முன்னால் நிறுத்தினார்கள். 30, 35 ஆயிரம் எண்ணிக்கையில் படை இருந்தது. அதனை 36 பிரிவுகளாக பிரித்தார்கள். முன்னும் பின்னும் மிகவும் ஒழுங்குடன் வரிசைகளை ஏற்படுத்தினார்கள். மையப் பகுதியை அபூஉபைதா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மைமனா பிரிவிற்கு அம்ர் பின் ஆஸ் அவர்களையும், ஷுர்ஹபீலையும் நியமித்தார்கள். மைஸரா யஸீத் பின் அபூசுஃப்யானின் தலைமைப் பொறுப்பில் இருந்தது. அதுமட்டுமின்றி ஒவ்வொரு வரிசையிலும் தனித்தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மக்களில் வீரராகவும், போர் கலைகளில் பிரபலமானவராகவும் இருந்த நபர்களையே அந்த அதிகாரிகளாக தேர்ந்தெடுத்தார்கள். மேலும் அவர்கள் குத்பாக்கள் மூலம் தமது பேச்சாற்றலால் மக்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் மக்களிடம் உத்வேகத்தை உருவாக்கக்கூடிய சொற்பொழிவாளர்களாக அவர்கள் இருந்தனர். தாக்கமிகு சொற்பொழிவுகளின் மூலம் படையினரிடம் உத்வேகத்தை உருவாக்க வேண்டும் என்ற தொண்டில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் அபூசுஃப்யானும் ஒருவராக இருந்தார். அவர் இளைஞர்களுக்கு மத்தியில் இந்த சொற்களைக் கூறிக்கொண்டு திரிந்தார்.

அல்லாஹ்! அல்லாஹ்! நீங்கள் அரபின் பாதுகாவலராகவும், இஸ்லாத்தின் உதவியாளராகவும் இருக்கின்றீர்கள். அந்த ரோமானிய மக்களின் பாதுகாவலனாகவும், உதவியில் பங்கு பெறக்கூடியவராகவும் உள்ளீர்கள். அல்லாஹ்வே! இந்த நாள் உனது நாட்களில் ஒன்றாகும். அல்லாஹ்வே! உனது அடியார்களுக்கு நீ உனது உதவியை இறக்குவாயாக.

அம்ர் பின் ஆஸ் அவர்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தார்கள். மக்களே! உங்களது பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள். முழங்காலிட்டு அமர்ந்து கொள்ளுங்கள். உங்களது ஈட்டிகளை தாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களிடத்திலும், உங்களது வரிசையிலும் ஒன்றிணைந்து விடுங்கள். உங்களது எதிரி உங்கள் மீது தாக்குதல் தொடுக்கும்போது அவர்களுக்கு காலக்கெடு வழங்குங்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் உங்களது ஈட்டியின் இலக்கிற்குள் வந்துவிட வேண்டும். அவ்வாறு வந்து விட்டால் நீங்கள் அவர்கள் மீது சிங்கங்களைப் போன்று கர்ஜித்து தாக்குதல் தொடுங்கள். உண்மையின் மீது மகிழ்ச்சியடைகின்ற இறைவன் மீது ஆணையாக! மேலும் பொய்யின் மீது வெறுப்படைந்து அதற்கு தண்டனை வழங்குகின்ற இறைவன் மீது ஆணையாக! மேலும் நன்மைக்கு நற்கூலி வழங்குகின்ற இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக எனக்கு இந்த செய்தி கிடைத்துள்ளது. முஸ்லிம்கள் ஒரு நகரத்திற்குப் பிறகு மற்றொரு நகரத்தை, ஒரு மாளிகைக்குப் பிறகு மற்றொரு மாளிகையை வெற்றி கொண்டவாறு இந்த நாட்டில் வெற்றி பெறுவார்கள். எனவே அந்த மக்களின் பெரும்பான்மை மற்றும் அவர்களின் எண்ணிக்கை உங்களை அச்சத்திற்குள்ளாக்க வேண்டாம். நீங்கள் உறுதிப்பாட்டுடன் போரிட்டால் பின்னர் இந்த மக்கள் ஹெஜல் அதாவது தீத்தர் என்ற ஒரு பறவை மற்றும் அதன் பிள்ளைகளைப் போன்று அச்சமடைந்து சிதறுண்டு விடுவார்கள்.

முஸ்லிம் படையின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் 30 அல்லது 25 ஆயிரத்தை விட அதிகமான நபர்கள் இருந்திருக்கவில்லை. ஆனால் அனைத்து அரேபியர்களிலும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தை பார்த்திருந்த சிறப்பான சான்றோர்களின் எண்ணிக்கை ஓராயிரமாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்டிருந்த நூறு சான்றோர்கள் இருந்தனர். மேலும் பத்தாயிரத்தை விட அதிகமான மக்கள் அரபின் மிகவும் பிரபலமான அர்ஸவ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். ஹுமைரின் ஒரு பெரும் எண்ணிக்கை மற்றும் ஜமாஅத் அதில் பங்கு பெற்றிருந்தது. ஹம்தான், ஹவ்லான், லெஜம், ஜுஸ்ஸாம் போன்ற பிரபலமான வீரர்கள் இருந்தனர். இந்தப் போரின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், பெண்களும் இதில் பங்கு பெற்றிருந்தனர். மிகவும் வீரத்துடன் பங்கு பெற்றனர். அமீர் முஆவியாவின் தாயும், அபூசுஃப்யானின் மனைவி ஹிந்தாவும் போரிட்டவாறு முன்னேறினார்கள். அப்போது நீங்கள் இந்த நிராகரிப்பாளர்களை உங்களது வாள்களால் வெட்டி விடுங்கள் என்று கூறிக்கொண்டே இருந்தார்கள். அதேபோன்று அபூசுஃப்யானின் மகளும், அமீர் முஆவியாவின் சகோதரியுமான ஜுவேரியா ஒரு கூட்டத்துடன் புறப்பட்டு தனது கணவருடன் இணைந்து ரோமானிய படையை எதிர்கொண்டார். ஒரு கடுமையான போரில் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். மித்தாத் மிகவும் அழகான குரலுடையவராக இருந்தார். அவர் படைக்கு முன்னால் சூரா அன்ஃபால் ஓதிக் கொண்டிருந்தார். அந்த அதிகாரத்தில் ஜிஹாத் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மற்றொரு பக்கம் ரோமானியர்களின் உத்வேகத்தின் நிலை எப்படி இருந்ததென்றால், 30 ஆயிரம் நபர்கள் அசைவதற்கு கூட எண்ணம் வரக்கூடாது என்று சங்கிலிகளை பாதங்களில் கட்டிக் கொண்டார்கள். மேலும் தங்களது கால்களையும் ஒருவர் மற்றவருடன் கட்டிக் கொண்டனர்.

ரோமானியர்கள் சார்பாக போர் ஆரம்பமானது. இரண்டு லட்சம் வீரர்களைக் கொண்ட படை ஒன்று முன்னேறியது. மேலும் ஆயிரக்கணக்கான பாதிரிகளும், பிஷப்களும் கரங்களில் சிலுவையை ஏந்திக் கொண்டு முன்னேறினார்கள். ஹஸ்ரத் ஈஸா வாழ்க என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தப் போர் தளவாடங்களைப் பார்த்து, அல்லாஹு அக்பர். எத்தனை எல்லையற்ற படை என்ற கூற்று தன்னிலை மறந்து ஒரு நபரின் வாயிலிருந்து வெளிப்பட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மௌனமாக இருங்கள் என்று உத்வேகத்துடன் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! எனது குதிரையின் லாடம் சிறந்ததாக இருந்தால் நான் இவ்வாறு கூறியிருப்பேன். கிறிஸ்துவர்கள் இந்த அளவிற்கு படையை இன்னும் அதிகரித்துக் கொள்ளட்டும் என்று கூறியிருப்பேன். சுருக்கமாக கிறிஸ்தவர்கள் மிகவும் சப்தத்துடன், அழுத்தத்துடன் தாக்குதல் தொடுத்தனர். அம்புகளின் மழைகளை பொழிந்து கொண்டே சென்றார்கள். முஸ்லிம்கள் நீண்ட நேரம் வரை உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். ஆனால் தாக்குதல் எந்த அளவிற்கு இருந்ததென்றால், முஸ்லிம்களின் அந்த ஒன்றிணைப்பு உடைந்து படையிலிருந்து தனித்து விட்டது. மிக ஒழுங்கற்ற நிலையில் அனைவரும் பின்வாங்கினர். தோல்விக்குள்ளானவர்கள் பின்னால் விலகி விலகி பெண்களின் கூடாரம் வரை சென்றடைந்து விட்டார்கள். முஸ்லிம்களின் இந்த நிலையைப் பார்த்து பெண்களுக்கும் கடும் கோபம் ஏற்பட்டது. கூடாரத்தின் கட்டைகளை எடுத்துக் கொண்டு அவர்களை விழித்தார்கள். ஆண்மையற்றவர்களே! நீங்கள் இங்கு வந்துள்ளீர்களா? நாங்கள் இந்த கட்டைகளால் உங்களது தலைகளை உடைத்து விடுவோம் என்று கூறினார்.

அபூசுஃப்பாயின் மனைவி ஹிந்தா கைகளில் கட்டையை எடுத்துக் கொண்டு முன்னேறினார். ஏனைய பெண்களும் அவர்களுக்கு பின்னால் வந்து விட்டார். அபூசுஃப்யான் ஓடுவதை ஹிந்தா பார்த்தார். அப்போது அவரது குதிரையின் கடிவாளத்தை பிடித்து இழுத்தவாறு எங்கே செல்கின்றீர்? திரும்பிச் செல்லும். போர் மைதானத்திற்கு செல்லும் என்று கூறினார்.

இதேபோன்று மற்றோர் அறிவிப்பும் உள்ளது. அதற்கேற்ப ஹிந்த் கட்டையை ஏந்திக் கொண்டு அபூசுஃப்யானை நோக்கிச் சென்றார். மேலும் இறைவன் மீது ஆணையாக! உண்மையான மார்க்கத்தை எதிர்ப்பதிலும், இறைவனின் உண்மையான தூதரை பொய்ப்படுத்துவதிலும் நீங்கள்

மிகக் கடுமையானவராக இருந்தீர்கள். இன்று போர் மைதானத்தில் உண்மை மார்க்கத்திற்கு புகழ் சேர்ப்பதற்கும், இறை தூதரின் விருப்பத்தை பெறுவதற்கும் உங்களது உயிரை அர்ப்பணித்து விடுங்கள். மேலும் இறைவனுக்கு முன்னால் உங்களது தலையை தாழ்த்திக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். அபூசுஃப்யானிற்கு மிகவும் ரோஷம் வந்தது. மேலும் திரும்பிச் சென்று கைகளில் வாளை எடுத்துக் கொண்டு எதிரிப் படையின் இதயப் பகுதியில் புகுந்து விட்டார். மற்றொரு வீரமான முஸ்லிம் பெண்மணி அவரது பெயர் ஹூலா ஆகும். அவர் இந்த கவிதையைப் படித்து முஸ்லிம்களுக்கு தன்மானத்தை ஊட்டிக் கொண்டிருந்தார்.

يَاهَارِبًا عَنْ نِسْوَةٍ تَقِيَّاتٍ فَعَنْ قَلِيْلٍ مَا تَرٰى سَبِيَّاتٍ
وَلَا حَظِيَّاتٍ وَلَا رَضِيَّاتٍ

இறையச்சம் கொண்ட பெண்களிடமிருந்து ஓடக்கூடியவர்களே! நீங்கள் விரைவில் அவர்களை கைதிகளாக காண்பீர்கள். அவர்கள் மிக உயர்ந்த அந்தஸ்திலும் இருக்க மாட்டார்கள். அவர்கள் விருப்பத்திற்குரியவர்களாகவும் இருக்க மாட்டார்கள். இந்த நிலையை கண்ட பிறகு மைமனாவின் ஒரு பகுதியின் தளபதியாக இருந்த மஆஸ் பின் ஜபல் அவர்கள் தமது குதிரையிலிருந்து கீழே குதித்தார்கள். மேலும் நான் நடந்தே சண்டையிடுகின்றேன் என்று கூறினார்கள். ஆனால் அவரது ஆசையை நிறைவு செய்வதற்கு எந்தவொரு வீரரும் குதிரைக்குரிய உரிமையை செலுத்தவில்லை. அப்போது குதிரை தயாராக இருந்தது. அன்னாரின் மகன் கூறினார்: ஆம். இந்த உரிமையை நான் செலுத்துவேன். ஏனென்றால் நான் சவாரி செய்து நல்ல முறையில் போரிட முடியும் என்று கூறினார்.

சுருக்கமாக, தந்தை மற்றும் மகன் இருவரும் போர் மைதானத்தில் இறங்கினார்கள். மேலும் வீரத்துடன் போரிட்டார்கள். முஸ்லிம்களின் நிலைபெற்றிருந்த பாதங்கள் தடுமாறின. அத்துடன் சுபைதா கோத்திரத்தின் தலைவராக இருந்த ஹஜ்ஜாஜ் 500 நபர்களுடன் முன்னேறினான். மேலும் முஸ்லிம்களை பின்தொடர்ந்து வந்து தடுத்து நிறுத்தினான். மைமனாவில் அஸத் கோத்திரத்தில் தாக்குதலிலிருந்து இது உறுதியானது. கிறிஸ்தவர்கள் போரில் தனது அனைத்து போர் தளவாடங்களையும் பயன்படுத்தினர். ஆனால் முஸ்லிம்கள் மலையைப் போன்று நிலைபெற்றிருந்தனர். கடுமையான போர் நடைபெற்றது. படையில் எல்லா பக்கமும் இரண்டு கரங்களும் வெட்டுண்டு கிடந்தன. ஆனால் தங்களது நோக்கதிலிருந்தும், உறுதிப்பாட்டிலிருந்தும் அவர்கள் தடுமாறவில்லை. அம்ர் பின் துஃபைல் தனது கோத்திரத்தின் தலைவராக இருந்தார். அவர் வாளை வீசிக்கொண்டே சென்றார். கர்ஜித்துக் கொண்டே சென்றார். அஸ்தேவ்! பாருங்கள். உங்களின் காரணமாக முஸ்லிம்களின் மீது பழி வர வேண்டாம். ஒன்பது பெரும் பெரும் தலைவர்கள் அவரின் கரங்களால் கொல்லப்பட்டார்கள். இறுதியில் அவரும் ஷஹீதாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது படையை பின்னால் நிறுத்தி இருந்தார்கள். திடீரென படையின் வரிசையை கிழித்துக் கொண்டு சென்றார்கள். ரோமானியர்களின் படை வரிசைகள் சிதைந்துவிடும் அளவிற்கு தாக்குதல் தொடுத்தார்கள். அபூஜஹிலுடைய மகனாக இருந்த இக்ரிமாவின் குதிரை முன்னேறியது. மேலும் ஒரு காலத்தில் நிராகரிப்பின் நிலையில் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக போரிட்டுள்ளேன். இன்று உங்களை எதிர்ப்பதில் நானும் பின்தங்கி இருக்க வேண்டுமா? என்று அவர் கூறினார். இதைக் கூறிவிட்டு படையை நோக்கி அவர் பார்வையை செலுத்தினார். மேலும் மரணிப்பதற்கு யாரெல்லாம் தயாராக இருக்கின்றார்? என்று கேட்டார். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இவ்வாறு முஸ்லிம்களிடம் உரையாடினார்கள்.

ஸரார் பின் அஸத் உட்பட 400 நபர்கள் மரணிப்பதற்கு பைஅத் செய்திருந்தான். மேலும் உறுதிப்பாட்டுடன் சண்டையிட்டனர். அநேகமாக அனைவரும் அங்கேயே வெட்டுண்டு வீழ்ந்தனர். இக்ரிமாவின் உடல் கொல்லப்பட்டவர்களின் குவியலிலிருந்து கிடைத்தது. சிறிது சிறிது மூச்சு எஞ்சியிருந்தது. காலித் (ரலி) அவர்கள் தமது தொடையில் அவரது தலையை வைத்தார். மேலும் வாளில் தண்ணீரை ஊற்றி விட்டு இவ்வாறு கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நாங்கள் ஷஹீதாகி மரணிக்க மாட்டோம் என்ற உமரின் எண்ணம் தவறாக இருந்தது. சுருக்கமாக இக்ரிமாவும், அவரது தோழர்களும் சுயம் மரணிக்கவில்லை. மாறாக ஆயிரக்கணக்கான ரோமானியர்களை அவர்கள் அழித்திருந்தார்கள்.

காலித் (ரலி) அவர்களின் தாக்குதல்கள் அவர்களின் வலிமையை உடைத்துவிட்டது. எந்த அளவுக்கென்றால் இறுதியில் அவர்களுக்கு பின்வாங்க நேரிட்டது. காலித் (ரலி), அவர்கள் பின்தள்ளச் செய்து துருன்ஜார் வரை சென்றடையச் செய்து விட்டார்கள். துருன்ஜார் மற்றும் ரோமானிய அதிகாரிகள் இந்தக் கண்கள் வெற்றியின் நிலையை பார்க்கவில்லையென்றால் தோல்வியையும் பார்க்க வேண்டாம் என்று கண்களை கட்டிக் கொண்டார்கள். அதே நேரம் ரோமானியர்களின் மைமனாவின் தலைவனாக இருந்த கனாதீர் என்பவன் மைஸரா மீது தாக்குதல் தொடுத்தான். துரதிஷ்டவசமாக இந்த பகுதியில் பெரும்பாலான மக்கள் லஹம் மற்றும் கஸ்ஸான் கோத்திரத்தின் நபர்களாக இருந்தார்கள். அவர்கள் சிரியாவின் சுற்றுப்புறங்களில் வசித்து வந்தார்கள். ஒரு நீண்ட காலமாக ரோமானியர்கள் இந்த ஆட்சியில் இருந்து வந்தார்கள். ரோமானியர்களுக்கு வரி செலுத்தி வந்தார்கள். எனவே ரோமானியர்களின் தாக்கம் அவர்களின் உள்ளங்களில் நிறைந்திருந்தது. அதன் விளைவாக முதல் தாக்குதலிலேயே அவர்களின் பாதங்கள் தடுமாறி விட்டன. முஸ்லிம்களாக இருந்தபோதிலும் முந்தைய திகிலே நிலைபெற்று வந்தது. அவர்கள் அதனால் அச்சமடைந்து விட்டனர். பாதங்கள் தடுமாறி விட்டன. ஆனால் எவ்வாறிருப்பினும் அதிகாரிகளும் வீரத்தை வெளிப்படுத்தினர். ஒருவேளை அதிகாரிகளும் தைரியமின்மையை வெளிப்படுத்தியிருந்தால் பின்னர் சண்டை முடிந்து போயிருக்கும்.

ரோமானியர்கள் தப்பி ஓடியவர்களை பின்தொடர்ந்து வந்தபோது கூடாரங்களை அடைந்தனர். இந்த நிலையைப் பார்த்து பெண்கள் தன்னிலை மறந்து புறப்பட்டனர். அவர்களின் வீரமானது கிறிஸ்துவர்களை முன்னேறுவதிலிருந்து தடுத்து விட்டது. படைகள் சிதறுண்டு இருந்தன. இருந்தபோதிலும் அதிகாரிகளில் கபாஸ் பின் அஷீம், ஸயீத் பின் ஸைத், யஸீத் பின் அபூசுஃப்யான், அம்ர் பின் ஆஸ், ஷுர்ஹபீல் பின் ஹஸனா ஆகியோர் வீரத்தை வெளிப்படுத்தி வந்தனர். குபாஸின் கரங்களிலிருந்து வாள்களும், ஈட்டிகளும் உடைந்து கீழே விழுந்தன. ஆனால் அவரின் நடைமுறையில் மாற்றம் ஏற்படவில்லை. ஈட்டி உடைந்து விழுந்தால் இந்த ஆயுதங்களை கொடுப்பதற்கு எவராவது இருக்கின்றாரா? போர் மைதானத்திலிருந்து விலகுவதாக இருந்தால் மரணித்து கீழே விழுவேன் என்று எவர் இறைவனுடன் உடன்படிக்கை செய்திருந்தாரோ அவரிடம் இந்த ஆயுதத்தை கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட யாராவது இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். மக்கள் உடனடியாக வாள் அல்லது ஈட்டியை அன்னாரின் கரங்களில் கொண்டு வந்து கொடுப்பார்கள். பின்னர் அவர்கள் சிங்கத்தைப் போன்று எதிரியின் மீது தாக்குதல் தொடுப்பார்கள். அபுல் அஹ்வர் குதிரையிலிருந்து கீழே குதித்தார். மேலும் தனக்கு கீழிருந்த படையிடம் அவர் கூறினார்: பொறுமை மற்றும் உறுதிப்பாடு உலகத்தில் கண்ணியத்தை வழங்கக்கூடியதாகும். மறுமையில் கருணையை வழங்கும். இந்த செல்வங்களை கைகளிலிருந்து நழுவ விட்டு விடாதீர்கள்.

ஸயீத் பின் ஸைத் கோபத்தில் முழங்காலில் நின்று கொண்டார்கள். ரோமானியர்கள் அவர்களை நோக்கி முன்னேறியபோது சிங்கத்தைப் போன்று தாக்குதல் நடத்தினார்கள். வழக்கின் அதிகாரியை கொன்று சாய்த்து விட்டார்கள். முஆவியாவின் சகோதரரான யஸீத் பின் அபூசுஃப்யான் மிகவும் உறுதிப்பாட்டுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். தற்செயலாக அன்னாரின் தந்தை அபூசுஃப்யான் அவர்கள் படைக்கு உத்வேகம் வழங்கிக் கொண்டு சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள். அன்னார் அவரின் பக்கம் வந்தார்கள். எனது மகனே! தற்போது மைதானத்தில் ஒவ்வொரு சிப்பாயும் வீரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். நீயும் போர் படை வீரராவாய். மற்ற சிப்பாய்களை விட உன் மீது வீரத்திற்கு அதிக உரிமை உள்ளது. உமது படையைச் சார்ந்த ஒரு சிப்பாயும் இந்த மைதானத்தில் தோற்று விட்டார். அவர் விடை பெற்று விட்டார். இது உனக்கு வெட்கத்திற்குரிய இடமாகும்.

ரோமானியர்கள் நாலாபுறமும் சுற்றி வளைத்திருந்தார்கள். ஷுர்ஹபீல் அதற்கு மத்தியில் மலையைப் போன்று நின்று விட்டார்கள். மேலும் திருக்குர்ஆனின் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள்.

اِنَّ اللّٰهَ اشْتَرٰى مِنَ الْمُؤْمِنِيْنَ اَنْفُسَهُمْ وَاَمْوَالَهُمْ
بِاَنَّ لَهُمُ الْجَنَّةَ ؕ يُقَاتِلُوْنَ فِىْ
سَبِيْلِ اللّٰهِ فَيَقْتُلُوْنَ وَيُقْتَلُوْنَ (9:111)

நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு சுவர்க்கம் அளிப்பதற்கு ஈடாக அவர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும், அவர்களின் செல்வங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டான். ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் சண்டையிடுகின்றனர். எனவே ஒன்று அவர்கள் தமது எதிரிகளை கொன்று விடுகின்றார்கள். அல்லது சுயமே மாண்டு விடுகின்றார்கள்.

இறைவனுடன் வியாபாரம் செய்யக்கூடியவர் மற்றும் இறைவனின் அண்டை வீட்டுக்காரராக ஆகக்கூடியவர் எங்கே இருக்கின்றார்? என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் குரலை செவியுற்றவர்கள் சுயமே திரும்பி வந்தார்கள். எந்த அளவுக்கென்றால் சிதறுண்டிருந்த படை மீண்டும் ஒன்று சேர்ந்து விட்டது. மேலும் ஷுர்ஹபீல், அவர்களை அழைத்துக் கொண்டு இந்த அளவுக்கு வீரத்துடன் போரிட்டார். அதாவது சண்டையிட்டுக் கொண்டிருந்த ரோமானியர்கள் முன்னேறுவதிலிருந்து தடுத்து நின்று விட்டார்கள்.

மற்றொரு பக்கம் பெண்கள் கூடாரங்களிலிருந்து வெளியேறி படையின் பின்புறம் வந்து நின்று கொண்டார்கள். மேலும் மைதானத்திலிருந்து பாதங்களை விலக்கிக் கொண்டால் பின்னர் எங்களது முகத்தை பார்க்க வேண்டாம் என்று உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தனர். போரின் இரு

பக்கமும் இது வரை சமமாக இருந்தது. இன்னும் கூறப்போனால் தானியங்களின் எடை ரோமானியர்களின் பக்கம் இருந்தது. உடனடியாக கைஸ் பின் உபைத் அவர்களிடம், காலித் அவர்கள் படையின் ஒரு பகுதியை ஒப்படைத்து மைஸராவின் பின்புறத்தில் நிலைநிறுத்தினார்கள். இவ்வாறு அவர்கள் தனியாக தாக்குதல் நடத்தினார்கள். ரோமானிய தலைவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். ஆனால் படையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அனைத்து வரிசைகளும் சீர்குலைந்தன. பதற்றமடைந்து பின்வாங்கி விட்டன. அத்துடன் ஸயீத் பின் ஸைத் அவர்கள் படையின் மையப் பகுதியிலிருந்து வெளியேறி தாக்குதல் தொடுத்தார்கள். ரோமானியர்கள் நீண்ட தூரம் வரை பின்வாங்கிக் கொண்டே சென்றார்கள். மைதானத்தின் வாசலில் ஓர் ஓடை இருந்தது. அதன் எல்லை வரை அவர்கள் வந்து விட்டனர். சிறிது நேரத்தில் அவர்களின் பிணங்களால் அந்த ஓடை நிறைந்து விட்டது. மைதானம் காலியாகி விட்டது. இவ்வாறு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த முக்கியத்துவம் வாய்ந்த போரில் மகத்துவமிக்க வெற்றியை வழங்கினான்.

இந்தப் போரில் இந்த சம்பவம் நினைவுகூறத்தக்தாகும். மிகவும் உச்ச கட்டத்தில் போர் இருந்தபோது மிகவும் வீரராக இருந்த, தனது உயிரையும் பொருட்படுத்தாமல் போரிட்டுக் கொண்டிருந்த ஹப்பாஸ் பின் கைஸ் அவர்களின் பாதங்களை ஒருவன் வாளால் வெட்டி விட்டான். ஒரு கால் வெட்டுண்டு துண்டானது. கால்களை நோக்கி பார்த்தபோது அதாவது கால் எங்கே என்று பார்க்க விரும்பியபோது கால் மறைந்து விட்டது என்பது தெரிய வந்தது. அன்னாரது கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் இந்த சம்பத்தின் மீது எப்போதும் பெருமிதம் கொள்கின்றனர்.

எவ்வளவு ரோமானியர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது பற்றி எண்ணிக்கையில் கருத்து வேறுபாடு உள்ளது. தபரி மற்றும் அஸ்தி லட்சக்கணக்கான எண்ணிக்கை என்று குறிப்பிடுகின்றனர். பலாதரி 70000 என்று குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்கள் புறமிருந்து 3000 நபர்களின் இழப்பு ஏற்பட்டது. அதில் இக்ரிமா, ஸிரார் பின் அஸ்வர், ஹிஷாம் பின் ஆஸி, அபான் பின் சயீத் ஆகியோர் அடங்குவர். கைஸர் அன்தாகியாவில் இருந்தான். அவனுக்கு தோல்வியின் செய்தி கிடைத்தது. அப்போது அவன் கிஸ்தன்தீனியா செல்வதற்கு ஆயத்தமானான். மேலும் செல்லும்போது சிரியாவே! விடைபெறுகின்றேன் என்று சிரியாவை நோக்கி முகம் திருப்பிக் கூறினான். அபூஉபைதா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வெற்றியின் நற்செய்தியை கடிதத்தில் எழுதினார்கள். மேலும் ஒரு சிறிய தூதரக் குழுவை அனுப்பினார்கள். அதில் ஹுதைஃபா பின் யமான் அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யர்மூக் போரின் செய்தியை அறிய காத்திருந்து பல நாட்கள் வரை தூங்காமல் இருந்தார்கள். வெற்றியின் செய்தி கிடைத்ததும் உடனடியாக சஜ்தாவில் விழுந்தார்கள். மேலும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

(ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 119–130 – 1991 ஆம் ஆண்டு தாருல் இஷாஅத் கராச்சியில் அச்சிடப்பட்டது & தாரீக் திப்ரி லி இப்னி ஜரீர் பக்கம் 338 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யர்மூக்கிற்காக ஹிம்ஸிலிருந்து தற்காலிகமாக இஸ்லாமிய படை ஒன்று செல்ல நேரிட்டது. இதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஸஹாபிகள் ரோமானிய பேரரசுடன் போரிட்டபோது முன்னேறிக் கொண்டே சென்றார்கள். அப்போது கிறிஸ்துவர்களின் மார்க்க ஸ்தலமான ஜெருஸலத்தை கைப்பற்றினார்கள். பின்னர் அதையும் விட முன்னேறிச் செல்ல தொடங்கினார்கள். அப்போது கிறிஸ்துவர்கள் இதைப் பார்த்து அதாவது அவர்களின் மார்க்க தலைமையகம் முஸ்லிம்களின் கைகளில் வந்து விட்டதைப் பார்த்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு இறுதி முயற்சியை செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். நாலாபுறமும் மார்க்க ஜிஹாதிற்கான அறிவிப்பைச் செய்து கிறிஸ்தவர்களிடம் ஓர் உத்வேகம் உருவாக்கப்பட்டது. மிகப்பெரும் படைகள் ஒன்றுகூட்டி இஸ்லாமிய படையின் மீது தாக்குதல் நடத்த ஆயத்தம் செய்தனர். முஸ்லிம்கள் அவர்களுக்கெதிரில் மிக குறைவான எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களின் இந்த கடுமையான தாக்குதலை கண்டு தற்காலிகமாக பின்வாங்குவதற்கு முடிவு செய்தனர்.

இஸ்லாமிய படை தளபதி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள்: எதிரி இத்தனை பெரிய எண்ணிக்கையில் இருக்கின்றான். எங்களது எண்ணிக்கை இவ்வளவு குறைவாக உள்ளது. எனவே அவர்களை எதிர்ப்பது படையின் அழிவிற்கு சமமாகும் என்று எழுதினார். தாங்கள் அனுமதி வழங்கினால் போர் படைகளை அணிவகுப்பை நடத்தி ஒழுங்கு செய்து போரை சுருக்குவதற்கு இஸ்லாமிய படைகள் பின்வாங்க நேரிடும். அப்போது தான் முழு கூட்டமும் ஒன்றுபட்டு எதிர்க்க முடியும். மேலும் அத்துடன் இதனையும் எழுதினார்கள். நாம் இந்த பகுதிகளிலிருந்து எதனை வெற்றி கொண்டு வைத்துள்ளோமோ அந்த மக்களிடமிருந்து வரி வசூல் செய்துள்ளோம். தாங்கள் இந்தப் பகுதிகளை கைவிட்டு விடுவதற்கு அனுமதி வழங்கினால் பின்னர் இந்த வரி குறித்து என்ன கட்டளை? என்பதையும் எங்களுக்கு கூறுங்கள்.

போரை சுருக்குவதற்கும், இஸ்லாமிய ஆற்றலை ஒன்றுகூட்டுவதற்கும் பின்வாங்குவதென்பது இஸ்லாமிய போதனைக்கு எதிரானதாகும். எனினும் நினைவிற் கொள்ளுங்கள். இஸ்லாமிய படை அவர்களை பாதுகாக்கும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அந்த மக்களிடமிருந்து ஜிஸ்யா வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமிய படை பின்வாங்கும் என்றால் அதன் பொருள் அவர்களால் இந்தப் பகுதிகளை பாதுகாக்க முடியாது என்பதாகும். எனவே யாரிடம் என்னவெல்லாம் வசூல் செய்யப்பட்டுள்ளதோ அதை அவரிடம் திருப்பி ஒப்படைத்து விடுங்கள் என்ற ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்தக் கட்டளை கிடைத்தபோது இஸ்லாமிய படைத் தளபதிகள் அந்தப் பகுதிகளின் ஜமீன்தார்கள் மற்றும் வியாபாரிகள் மற்றும் ஏனைய மக்களை அழைத்து அவர்களிடம் வசூல் செய்யப்பட்ட தொகையை திருப்பி ஒப்படைத்து விட்டார்கள். மேலும் இஸ்லாமிய படை உங்களை பாதுகாக்கும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் உங்களிடமிருந்து இந்த தொகை வசூல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது எங்களால் எதிரியை எதிர்கொள்வதில் எங்களை நாங்களே பலவீனமானவர்களாக கருதுகின்றோம். மேலும் சிறிது நேரம் கழித்து தற்காலிகமாக நாங்கள் பின்வாங்கிக் கொண்டிருப்போம். இதன் காரணமாக எங்களால் உங்களை பாதுகாக்க முடியாது. இந்த தொகையை எங்களிடம் வைத்துக் கொள்வது சரியல்ல என்று இஸ்லாமிய படையின் தளபதிகள் கூறினர்.

இது எப்படிப்பட்ட முன்னுதாரணமாக இருந்ததென்றால், இது உலகின் வரலாற்றில் வேறு எந்த அரசரும் காட்டாத முன்னுதாரணமாகும். அரசன் ஓரிடத்திலிருந்து பின்வாங்கும்போது வசூல் செய்கின்ற வரியை திருப்பிக் கொடுப்பதற்கு பகரமாக அந்தப் பகுதிகளில் அவர்கள் கொள்ளையடிப்பார்கள். தற்போது இந்தப் பகுதி பிறரின் கைகளில் செல்லக்கூடியதாகும். தற்போது இங்கிருந்து எவ்வளவு பயன்பெற முடியுமோ பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றனர். அடுத்து அவர்கள் அங்கு தங்கப்போவதும் கிடையாது. எனவே அவப்பெயருக்கான எந்த அச்சமும் அவர்களுக்கு இருப்பதில்லை. ஓர் உயர்தரமான ஒழுங்கான அரசாங்கம் இருந்தால் அதிகபட்சமாக அமைதியாக படையை திரும்பப் பெற்றுக் கொண்டு சென்று விடும். மேலும் அதிக பட்சமாக கொள்ளையடிக்க விடுவதில்லை. ஆனால் இஸ்லாமிய படை காட்டிய முன்னுதாரணம் உலகம் தோன்றிய நாள் முதல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மட்டுமே நமக்கு காணக் கிடைக்கின்றது. மாறாக, பிற்காலத்தை நாம் சேர்த்துக் கொண்டால் இதற்கு வேறு எந்த உதாரணமும் உலகில் கிடைப்பதில்லை. ஒரு வெற்றி பெற்ற சமுதாயம் ஓரிடத்தை விட்டுச் சென்றது என்றால் அந்தப் பகுதியின் மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட வரியையும், ஜிஸ்யாவையும், செல்வங்களையும் திருப்பி ஒப்படைத்ததில்லை.

இந்த சம்பவம் கிறிஸ்துவர்களின் மீது எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியதென்றால் அவர்களின் மார்க்கத்தினரின் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. தாக்குதல் தொடுப்பவர்கள் அவர்களது சமுதாயத்தின் ஜெனரல்களாகவும், கர்னல்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்தனர். போர் படை வீரர்கள் அவர்களின் சகோதரர்களாக இருந்தனர். அவ்வாறிருந்தபோதிலும் இந்தப் போர் கிறிஸ்துவர்களுக்கு மார்க்க போராக ஆக்கப்பட்டுவிட்டது. கிறிஸ்தவர்களின் தலைமையகம் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி முஸ்லிம்களின் கரங்களுக்கு வந்திருந்தது. அதன் சுதந்திரத்திற்கான கனவுகளை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த எல்லா நிலையிலும் கிருஸ்துவ ஆண்களும், பெண்களும் வீட்டை விட்டுவெளியேறி அழுதனர். முஸ்லிம்கள் திரும்ப வர வேண்டும் என்று பிரார்த்தனைகளும் செய்து கொண்டிருந்தனர்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 24 பக்கம் 15–17)

ஹஸ்ரத் முஸ்லிம் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு வரலாற்றை குறித்து பெரும் புலமை இருந்தது. அவர்களின் எண்ணம் இவ்வாறே இருந்தது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்ட பிறகு முஸ்லிம்கள் திரும்பி வந்தனர். பின்னர் இந்த வரி போன்றவையெல்லாம் திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா அவர்களைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் யர்மூக் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளின் உயிர்கள் அபாயத்தில் இருந்தன. பெரும்பாலான முஸ்லிம்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது இஸ்லாமிய படையின் கமாண்டர் சீஃப் ஹஸ்ரத் அபூஉபைதா பின் அல் ஜராஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் ரோமானிய படையின் மீது திகிலை ஏற்படுத்தக்கூடிய சில வீரமிக்க இளைஞர்கள் முன்னால் வர வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் முன்னால் வந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் இவ்வாறு விண்ணப்பித்தார்கள்: எனக்கு எனது விருப்பப்படி

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 21 Oct 2021 Issue No. 42

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சில நபர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதி தாருங்கள். நான் அந்த இளைஞர்களை அழைத்துக் கொண்டு எதிரிப் படையின் மையப் பகுதியில் தாக்குதல் தொடுப்பேன். அவர்களின் ஜெனரலை கொலை செய்வதற்கு நான் முயற்சி செய்வேன். அந்த நேரத்தில் ரோமானிய படையின் ஜெனரல் மிகவும் வலிமையுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். முஸ்லிம்களுக்கெதிராக நீங்கள் வெற்றி பெற்று விட்டால் நான் எனது மகளை உமக்கு திருமணம் முடித்துக் கொடுப்பேன். மேலும் எனது பாதி சொத்தை உம்மிடம் கொடுத்து விடுவேன் என்று அந்த அரசர் அவருக்கு வாக்குறுதி செய்திருந்தார். இந்த வாக்குறுதியின் காரணமாக அவன் மிகவும் உத்வேகத்தில் இருந்தான். மேலும் தனது சொந்த அரச படையை அழைத்துக் கொண்டு போர் மைதானத்தில் இறங்கி இருந்தான். அவன் சிப்பாய்களுக்கு பெரும் தொகை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தான். ரோமானிய படை வீரர்கள் உயிரைக் கொடுத்து சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

ரோமானிய படை முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தியபோது அந்த ஜெனரல் படையின் மையப் பகுதியில் நின்று கொண்டிருந்தான். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் சுமார் 400 நபர்களை அழைத்துக் கொண்டு படையின் மையப் பகுதியின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். அவர்களின் தோழர்களில் ஒருவர் அந்த ஜெனரல் மீது தாக்குதல் தொடுத்து அவனை கீழே வீழ்த்தி விட்டார். எதிர்தரப்பில் லட்சக்கணக்கான படை இருந்தது. இவர்கள் வெறும் 400 முஸ்லிம்களாக இருந்தனர். எனவே போர் எளிதாக இருக்கவில்லை. அவர் ஜெனரலை கொன்றிருந்தார். அவர் மரணித்ததன் காரணமாக படையும் இங்கும் அங்கும் சிதறுண்டது. ஆனால் எதிரி அந்த நபர்களின் மீது தாக்குதல் தொடுத்தான். ஒரு சிலரைத் தவிர்த்து மற்ற அனைவரும் ஷஹீதாகி விட்டனர். இவர்களில் 12 நபர்கள் மிகவும் காயமுற்றிருந்தனர். முஸ்லிம் படைக்கு வெற்றி கிடைத்தபோது அந்த நபர்களை தேடுகின்ற பணி தொடங்கியது. இந்த காயமுற்ற 12 நபர்களில், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் அடங்குவார்.

ஒரு முஸ்லிம் சிப்பாய் அவர்களிடத்தில் வந்தார். அன்னாரின் நிலை மோசமாக இருந்தது. இக்ரிமா! என்னிடத்தில் தண்ணீர் பை உள்ளது. நீங்கள் சிறிது குடித்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். அன்னார் முகத்தை திருப்பிப் பார்த்தார்கள். அப்போது அருகிலேயே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் மகனான ஃபஸல் (ரலி) அவர்கள் கீழே கிடந்தார்கள். அன்னார் மிகவும் காயமுற்றிருந்தார்கள். இக்ரிமா அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடுமையான எதிர்ப்பு இருந்தபோது எந்த மக்கள் உதவி செய்தார்களோ அவர்களின் பிள்ளைகள் தாகத்தால் மரணிக்கக் கூடாது. அதனை எனது தன்மானம் சகித்துக் கொள்ளாது. அவர்கள் தண்ணீர் குடித்து உயிருடன் இருக்க வேண்டும். முதலில் அவர்களுக்கு தண்ணீர் கொடுங்கள். பின்னர் ஏதாவது எஞ்சியிருந்தால் என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆக அந்த நபர் ஃபஸல் (ரலி) அவர்களிடம் சென்றார். அன்னார் அடுத்த காயமுற்றவரின் பக்கம் சைகை செய்தார்கள். மேலும் அவருக்கு முதலில் கொடுங்கள் என்று கூறினார்கள். அவர் என்னை விட அதிகமாக உரிமை பெற்றுள்ளார் என்று கூறியபோது அந்த நபர் அந்த காயமுற்றவரிடத்தில் சென்றார். அப்போது அவர் அடுத்த காயமுற்றவரை நோக்கி சைகை செய்தவாறு இன்ன நபர் என்னை விட அதிக உரிமை படைத்தவராக உள்ளார். அவருக்கு முதலில் குடிக்க கொடுங்கள் என்று கூறினார். இவ்வாறு அந்த நபர் எந்த போர் வீரரிடம் சென்றாலும் அவர் அவரை மற்ற நபரிடமே அனுப்பி வைத்தார். அவர்களில் எவரும் தண்ணீர் அருந்தவில்லை. இறுதியாக காயமுற்ற கடைசி நபரிடத்தில் சென்றபோது அவர் இறந்து விட்டார். இக்ரிமாவின் பக்கம் திரும்பியபோது அவரும் மூச்சை நிறுத்திக் கொண்டிருந்தார். இவ்வாறு எஞ்சிய காயமுற்றவர்களின் நிலையும் இருந்தது. அவர் யாரிடத்தில் சென்றாலும் அந்த நபர் மரணமடைந்திருந்தார்.

(ஹர் அஹ்மதி அவ்ரத் அஹ்மதிய்யத் கி ஸதாகத் கா ஏக் ஸிந்தா நிஷான், அன்வாருல் உலூம் தொகுதி 26 பக்கம் 229–231)

ஆக இந்தப் போரின் முடிவு இதுவாகவே இருந்தது. அல்லாஹ் இவ்வாறு மீண்டும் வெற்றியை வழங்கினான். எவ்வாறிருப்பினும் இந்த நற்குறிப்பு தொடர்கின்றது. எதிர்காலத்திலும் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*(9வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

அன்னார், நீங்கள் எந்த இமாமுக்காக காத்துக் கொண்டிருக்கின்றீர்களோ அவர் வந்து விட்டார். இதுவே உண்மையான இஸ்லாம் என்று நாங்கள் கூறுகின்றோம். இந்த விஷயத்தைக் கேட்ட பிறகு நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகத்தை படித்தேன். இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற புத்தகத்தையும் படித்தேன். நான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டேன்.

பெனின் நாட்டின் கல்வி அறிவு படைத்த அஹ்மதிகளில் இவரும் ஒருவர் ஆவர். ஃபிரான்ஸ் நாட்டிலிருந்து பிஸினஸ் மேனேஜ்மன்ட் துறையில் மாஸ்டர்ஸ் செய்தார்கள். பெனின் நாட்டின் மின்சாரம் மற்றும் தண்ணீர் நேஷனல் டைரக்டர் என்ற பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள். மிகவும் தாக்கமிகு மனிதராகவும், கண்ணியமிக்க நபராகவும் இருந்தார்கள். தொழுகைகளை பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், ஒரு நல்ல, தூய மனிதராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். புத்தகங்களை வாசிப்பது அன்னாரின் வாடிக்கையாக இருந்தது. மர்ஹூம் ஏராளமான ஜமாஅத் பொறுப்புகளை வகித்துள்ளார்கள். பெனின் ஜமாஅத்திற்கு அன்னார் ஏராளமான தொண்டாற்றியுள்ளார். அன்னார் மனிதம் முதலில் அமைப்பின் முதல் சேர்மனாக இருந்தார்கள். ஆரம்பம் முதலே இந்த பொறுப்பில் இருந்தார்கள். அன்னார் மருத்துவ முகாம்களை நடத்தி வந்தார்கள். மருத்துவர்களுடன் சுயமே சென்று பகல் முழுவதும் உணவு உண்ணாமல் மனிதத் தொண்டில் மும்முரமாக இருந்து வந்தார்கள்.

டாக்டர் கமர் அஹ்மது அலி சாஹிப் கூறுகின்றார்கள்: நான் மருத்துவராக பெனினில் தொண்டாற்றும் நற்பேறு எனக்கு கிடைத்துள்ளது. மருத்துவ முகாமின்போது சோர்வு இருந்தாலும் அல்லது பயணத்தின் காரணமாக தாமதமாக தூங்கி இருந்தாலும் எப்போதும் அன்னார் இரவில் நீண்ட நேரம் தஹஜ்ஜுத் தொழுவதை நான் பார்த்துள்ளேன். இரவில் கண்விழித்தபோது அவர் தஹஜ்ஜுத் தொழுவதை நான் கண்டுள்ளேன்.

முஸஃப்பர் அஹ்மது முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்கள்: சொற்பொழிவாற்றும்போதெல்லாம் மிக வேதனையுடன் பைஅத் நிபந்தனைகளின்படி அமல் செய்வதற்கு அறிவுறுத்துவார்கள். மேலும் என்னிடத்தில் இவ்வாறு கூறி வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் اَلَيۡسَ اللّٰهُ بِكَافٍ عَبۡدَهٗ என்ற இல்ஹாமை ஓர் அஹ்மதி புரியாதவரை அவர் உலக வணங்கியாகவே இருப்பார்.

அடுத்து அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 2006 ஆம் ஆண்டில் ஜமாஅத்திற்கு 30 ஏக்கர் ஒரு நிலத்தை வழங்கினார்கள். 2021 ஆம் ஆண்டில் நான் எனது ஆசையை வெளிப்படுத்தினேன். அதாவது பெனின் நாட்டில் மத்ரஸத்துல் ஹிஃப்ழ் கட்டிடத்தை கட்டி ஜமாஅத்திற்கு அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்பது எனது ஆசையாகும் என்று கூறியிருந்தேன். எனவே அன்னார் மிகுந்த புன்னகையுடன், இன்ஷா அல்லாஹ் என்று கூறினார்கள். தற்போது அந்தப் பணி துவங்கியும் விட்டது. ஜமாஅத்தின் பிள்ளைகள் எழுதப்படிக்க கற்றுக் கொண்டு விட்டால் பெனின் ஜமாஅத் ஆஃப்ரிக்காவின் பெரிய ஜமாஅத்துகளில் ஒன்றாக இருக்கும். அன்னார் பிள்ளைகளுக்கு ஜமாஅத் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கி வந்தார்கள்.

பைத்துல் இக்ராம் அனாதை இல்லத்திற்கு சென்றார்கள். அங்கு அதன் இன்சார்ஜ் ஆன டாக்டர் வஹீத் சாஹிப் அவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்கள். இந்தப் பிள்ளைகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை மிகவும் கருத்தில் கொள்ளுங்கள். ஏனென்றால் இந்தப் பிள்ளைகள் நமது ஜமாஅத் மற்றும் சமுதாயத்தின் பிள்ளைகள் ஆவர். நாம் அனைவரும் இவர்களின் பெற்றோர்கள் ஆவோம். மேலும் துஆக்களும் செய்து வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் இவர்கள் அனைவரின் அந்தஸ்துகளையும் உயர்த்துவானாக. நான் கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad